விலை 20/=
பக்கங்கள் 24
16 மார்ச் 2019
புதுமை : 03 விதி : 145

# புதுவிதி
PUTHU VITHI

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# கால அவகாசமும் கண்காணிப்புக் காலமும்





பேஸ்புக் பயங்கரம்



வெனிசுலாவில் நடப்பது என்ன?



ஒரு தீவையே புரட்டிப் போட்ட எண்ணெய்க் கசிவு



வேலை போரடிக்கிறதா...?

# தேடும் கண்கள்

## ஆட்காட்டி

ஆங்கிலம்: Lapwing
உயிரியல்: Vanellinae
உயரம் : 10 - 16 அங்குலம்

ஆட்காட்டி குருவிகள் அளவில் பெரிய கரைப் பறவைகள். மனிதர்களையோ, எதிரிகளையோ கண்டால் ஒலி எழுப்பி மற்ற பறவைகளுக்கும் அறிவிக்கும்.



இரவு - பகல் என தொடர்ந்து தனது சுற்றுப்புறத்தைக் கண்காணித்து எச்சரிக்கை எழுப்புவதாலேயே இதனை ஆட்காட்டி (ஆள்காட்டி) என அழைக்கிறார்கள். போர் வீரர்கள் காடுகளுக்குள் இதன் ஒலியை வைத்து எதிரிகளின் வருகையை அறிந்து விடுவார்கள். இப்பறவை தரையில் கூடுகட்டும் இயல்பு கொண்டது.

சிவப்பு மூக்கு ஆட்காட்டி, மஞ்சள் மூக்கு ஆட்காட்டி என இருவகை ஆட்காட்டிகள் உண்டு. இவற்றின் இறகுகள் ஊதா கலந்த பழுப்பு நிறம் கொண்டது. தலை, மார்பு, கழுத்தில் கறுப்பு நிறமும் இடையில் வெள்ளை நிறமும் கொண்டவை. கண்ணைச் சுற்றி சிவப்பு அல்லது மஞ்சள் நிறம் இருக்கும். அலகின் நுனி மட்டும் கறுப்பாகவும் கால்கள் மஞ்சள் நிறத்திலும் இருக்கும்.

ஆணும் பெண்ணும் பார்வைக்கு ஒரே தோற்றம் கொண்டவை. ஆனாலும் ஆணின் சிறகு பெண்ணின் சிறகை விட சற்று நீளமானது. பொதுவாக இணைகளாகவும் குழுக்களாகவும் மேய்ச்சல் நிலம், குளம், சிறு குட்டைகள் நீர் நிலைகள் என்பவற்றின் ஓரங்களில் காணப்படும்.

ஆசியா கண்டம் முழுவதும் பரந்து வாழ்கின்றன. இப்பறவைகள் இடம்பெயர்வதில்லை. மார்ச் - ஓகஸ்ட் இவற்றின் இனப்பெருக்க காலம்.



**பனங்காகம் / பனங்காகம்**
வைல்ட் ஸ்ரீலங்கா படம் :சோபன்ராஸ்



**கிளி** வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : ஜெயதீஸ்



**காட்டுமுயல்** வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : துஷான் அலெக்ஸாண்டர்



**கருந்தேள்**
இடம்: கோப்பாய் வெ.ஹம்சியா



**சிறுத்தை** வைல்ட் ஸ்ரீலங்கா
படம் : அன்ரன் போட்டோகிராபி

**ஊசிவால் வாத்து**
படம் : குகரூபன்



# புதுவிதி

PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 16 மார்ச் 2019 | விதி : 145


# காணாமலாக்கப்படல் சந்தேகநபர்கள் பணி இடைநீக்கம் செய்யப்படவேண்டும்

## காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம் அறிக்கை

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சம்பந்தமாக குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தற்போது அவர்கள் வசிக்கும் பதவிகளிலிருந்து பணி இடைநீக்கம் செய்யப்பட்டு அவர்கள் மீது நீதியான விசாரணை நடத்தப்படவேண்டுமென காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் அனுப்பிவைக்கப்பட்டபோதும் அது தொடர்பாக எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அதன் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்த அறிக்கைக்கு எதிரான நடவடிக்கைகள் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. குற்றம்சாட்டப்பட பல அதிகாரிகள் வெளிநாட்டுத் தூதரகங்களில் பணியாற்றுகின்றனர். அண்மையில் இவ்வறிக்கைக்கு சவால் விடுக்கும் வகையில் சவேந்திர சில்வா இராணுவத் தலைமை அதிகாரியாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இப்படியான நடுநிலையில் காணாமற்போனோர் அலுவலகம் நீண்ட இழுபறியின் பின் ஏன் அமைக்கப்பட்டது எனப் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

அதேவேளையில் காணாமற்போனோர் தொடர்பான போராட்டம் கிளிநொச்சியில் இடம்பெற்றபோது அங்கு மக்கள் காணாமற்போனோர் அலுவலகத்துக்கு எதிராகக் கோஷம் எழுப்பியபோது சில குண்டர்கள் தாங்கள் அந்த அலுவலகத்தைக் கஷ்டப்பட்டுக் கொண்டு வந்ததாகவும் அதற்கு எதிராகக் கோசம் போடக்கூடாதெனவும் கூறிக் குழப்பம் விளைவித்தனர் அவர்கள். பிரபல சட்டவல்லுநரான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் கையாள் எனவும் தெரியவந்துள்ளது.

ஆனால் அந்தக் குண்டர்கள் காணாமற்போனோர் அலுவலகத்தின் அறிக்கைக்கு நேர்விரோதமாக அரசாங்கம் செயற்படுகின்ற நிலையில் அந்த அலுவலகத்தால் என்ன பயன் என்பது பற்றி அவர்கள் எதுவும் சொல்லவில்லை.

**கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு**
**சட்டியில் இல்லாத கறி அகப்பையில் வராது**

# நாய்களின் இனப்பெருக்கும் தடுக்க 200 மில்லியன்



கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தை தடுக்க 2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஒரு காலத்தில் தெருவில் திரியும் கட்டாக்காலி நாய்களை நகரசபை, மாநகரசபைகள், பிடித்துக் கொண்டு போய் கொன்று விடுவதுண்டு. ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அதீத ஜீவகாருண்யம் காரணமாக கட்டாக்காலி நாய்கள் கொல்லப்படுவதைத் தடைசெய்து விட்டார். இலட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று பெற்ற யுத்த வெற்றியைக் கொண்டாடிய அவர் நாய்கள் கொல்லப்படக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

அவர் தனது மாளிகையில் பல நாய்களை வளர்த்ததுடன் அவை தங்குமிடத்துக்கு குளிரூட்டல் வசதியும் செய்து தந்தார். நாய்களின் வேலைக்காரர்களாக மனிதர்களை நியமித்து இருந்தார்.

நாய்களின் இனப்பெருக்கத்தை தடை செய்ய நிதி ஒதுக்கப்பட்டதால் அவர் வரவு -செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்திருந்தார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் கொடுக்க மறுக்கும் நாட்டில் நாய்களுக்கு 200 மில்லியனா எனக் கோபமடைந்தார் ஒரு விசயம் விளங்காத அப்பாவி.

**நாயை மனிதன் தடவினால் நாகரிகம்**
**மனிதனை நாய் கடித்தால் நாலு ஊசி**

# இலங்கையின் புராதன சின்னங்கள் பற்றி மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க அவர்கள் இலங்கையின் புராதன சின்னங்கள் பற்றி மாணவர்களுக்கும் கற்பிக்கவேண்டுமென அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்திருந்தார்கள்.

இலங்கையின் மட்டுமன்றி எந்த நாட்டிலும் மாணவர்கள் புராதன சின்னங்களையும் வரலாற்றையும் அறிந்து வைத்திருக்கவேண்டும் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை.

சிவனொளிபாதமலை இந்துக்களின் தெய்வமான சிவனின் காலடி பதிந்துள்ள இடமெனக் காலங்காலமாக நம்பப்பட்டு வருகிறது. அதன் காரணமாகவே அதற்கு சிவனொளிபாத மலை எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டு வருகிறது.

அண்மையில் சிவனொளிபாத மலை என மும்மொழிகளிலும் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக புத்தரின் பாதம் பொறித்த இடம் என ஒரு பெயர்ப்பலை நடப்பட்டு இது தமிழ் மக்களின் எதிர்ப்பை உருவாக்கியது. ஆனால் மஸ்கலியா நகரசபையினர் எடுத்த துரித முயற்சியால் அது அகற்றப்பட்டு மீண்டும் 'சிவனொளிபாத மலை' எனப் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை நடப்பட்டது.

இது பற்றி ஒரு சிங்கள பௌத்த பிரமுகர் கருத்து வெளியிடும்போது நயினாதீவில் இரு சகோதரர்களுக்கு இடையிலே அரசாட்சி பற்றி பிணக்கு ஏற்பட்டபோது அதைத் தீர்க்க ஆகாயமார்க்கமாக வந்த புத்தர் இங்கு இளைப்பாற இறங்கியபோது தன் காலடியை பதித்ததவர். தற்சமயம் அது பிழையான முறையில் சிவனின் காலடி எனக் கூறப்படுவதாகவும் தெரிவித்தார்.

பல பாரம்பரிய இந்துக் கோவில்களில் பௌத்த புராதன சின்னங்கள் காணப்பட்டதாகச் சொல்லப்பட்டு விகாரைகள் அமைக்கப்பட்டு வருவதையும் நாமறிவோம். உண்மையான புராதன சின்னங்கள் பற்றியா அல்லது தொல்பொருள் திணைக்களத்தால் இட்டுக் கட்டப்படும் கதைகள் பற்றியா மாணவர்களுக்கு அறிவுத்தப்படவேண்டும் என்பதை பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்




























## கிழிசல்கள் ....



புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## மனிதப் புதைகுழி அறிக்கை மத மோதலுக்கான தூபமா?

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறியது போன்று மன்னார் மனிதப் புதைகுழி ஆய்வு தொடர்பான அறிக்கை உண்மையில் தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. அதிர்ச்சியை மட்டுமல்ல பலத்த சந்தேகத்தையும் எழுப்பியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும், இலங்கை அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கையை முற்றாக இழக்கச் செய்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்பட்டபோதே திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்ட மதப் பூசல்களுக்கு மேலும் வலுச் சேர்க்கும் விதமாக மன்னார் புதைகுழி தொடர்பான புளோரிடா ஆய்வு நிறுவனத்தின் அறிக்கை வெளியாகி இருக்கிறது. இந்தப் புதைகுழி குறித்த ஆய்வு செய்த தடயவியல் நிபுணர் சமிந்த ராஜபக்ஷ அறிக்கையில் திருப்தி காட்டினாலும் தமிழ் மக்கள் அவர் மீது நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பது ஏலவே அறிந்ததே. இதற்கு அவர் பெரும்பான்மை இனத்தவராக இருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

பி.பி.ஸி. செய்திச் சேவைக்கு பேட்டியளித்த சமிந்த ராஜபக்ஷவின் கருத்துக்கள் பல அவர் மீதான சந்தேகங்களை மேலோங்கச் செய்தன. இந்நிலையில் தடயவியல் நிபுணரும் பேராசிரியருமான செல்வ சுரேஷ் இந்த எலும்புக்கூடுகள் 50 ஆண்டுகளுக்கு உட்பட்டவையே என அடித்துச் சொல்கிறார். அண்மையில் மன்னாரில் இந்து - கிறிஸ்தவ முரண்பாடு ஒன்று திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது. இது முளையிலேயே கிள்ளப்பட்ட போதும் அதற்கு தூபம் போட்டு வளர்க்கும் செயல்கள் பேரினவாதத்தால் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் கிறிஸ்தவ மதத்துக்கு மதம் மாறிய 600 பேருக்கும் மேற்பட்டவர்களை சங்கிலிய மன்னன் கொன்றான் என்றும் அந்தப் புதைகுழியே இதுவென்ற ரீதியில் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. ஆனால் ஏற்கனவே இவர்கள் கொல்லப்பட்ட இடத்தில் தேவாலயம் ஒன்று அமைக்கப்பட்டுவிட்டது என்பது வரலாறு. அதையும் இதையும் இணைத்து வரலாற்றுத் திரிபை ஏற்படுத்தி மீண்டும் இந்து - கிறிஸ்தவ மோதலை உருப்பெற வைக்கும் முயற்சியாகவே இதை நோக்க முடியும்.

இவ்வாறான நிலையில் கார்பன் அறிக்கையை நம்பும் - நம்பாதவர்கள் என இரு பிரிவினர் உருவாகி, வரலாற்றுத் தகவல்களை திரித்து வருகிறார்கள். இந்தத் தகவல்கள் மகாவம்சக் கதைகள் போன்று ஆராய்ச்சி யற்ற வெறுமனே புனைவை மட்டுமே நம்பியதாகவே உருவாக்கப்படுகின்றன. மேலும், ஒரு மத மோதலை உருவாக்கி விடும் இந்தப் போக்குகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதிகாரம் கையில் இருக்கிறது என்பதற்காக வரலாற்றைத் திரிப்பது என்பது மோசமான விளைவுகளையே தரும். ஏலவே மகாசம்வம் தந்த திரிபுகளால் இந் நாட்டில் சிந்தப்பட்ட தமிழ் - சிங்கள மக்களின் இரத்தம் இதற்கு சாட்சியம்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 43

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

ஒரு மாலை வேளை புதுமாத்தளன் பிள்ளையார் கோவிலடியிலிருந்து வலைஞர்மடத்தில் இருப்பதற்கான இடத்தை பார்த்துவிட்டு வர நடந்தே பயணித்தோம். என்னுடன் தோழியும் மாமியாரும் வந்திருந்தார்கள். இடம் ஒரு பனங்கூடல். அந்த வீட்டு உரிமையாளர் இடம் தருவதாக தெரிவித்தார். அவர்களது வீட்டின் முன் பகுதியில் இரண்டு சிறிய கொட்டிலைப்போட வசதியிருந்தது. தோழியாக இருந்தாலும் தோழமையாக இருந்தாலும் நாம் தனித்தனியாக இருப்பதையே விரும்பினோம். அதனால் உறவுகளுக்கிடையில் விரிசல் நிலை ஏற்படாது என்பது எங்கள் கொள்கையாக இருந்தது.

இடத்தைப் பார்த்து விட்டு பனங்குற்றிகளுக்கும் விலை நிர்ணயித்து மீண்டும் புதுமாத்தளன் பிள்ளையார் கோவிலடியை நெருங்கிக் கொண்டிருந்தோம். போகும் போது அம்பலவன் பொக்கனை வீதியை அடுத்திருந்த வெளிப்பகுதியை போராளிகள் துப்பரவு செய்து கொண்டிருந்தனர். அதைப் பார்த்து "ஆட்டியை(ஆட்லறி) கொண்டரப்போறாங்கள் போல" என தோழியின் மாமி கூறிக்கொண்டார்."

'இல்லை. ஆட்டியை பெரும்பாலும் வெட்டை வெளில வைச்சிருக்க மாட்டார்கள். கிபிரெல்லோ அடிச்சுப்போடுவான்" என தோழி கூறினாள்.

நான் ஒன்றும் கதைக்கவில்லை. ஆனால் ஏதோ ஒரு பெரிய விடயம் நடக்கப்போகிறது என்பதை உணர முடிந்தது. திரும்பி வரும்போது கூடைப்பந்து விளையாடுவதற்கு திடல் அமைப்பது போல கோடுகள் போட்டு நீள்சதுர பெட்டி வரைந்திருந்தார்கள். படங்களில் பார்க்கும் விமான ஓடுபாதையைப்போல் அது இருந்தது. வான்புலிகளின் சீருடையில் சில போராளிகள் நின்றார்கள். என்னவோ தெரியவில்லை சீருடையில் அவர்களின் கம்பீரத்தைப் பார்க்கும் போதெல்லாம் இந்தக்காலத்தில் பிறந்து வாழ்ந்தோமே என்ற பெருமை பொங்கும் உணர்வை யாராலும் தடுத்து நிறுத்த முடியாததே.

வண்டு (வேவு விமானம்) வேறு ஒரு பக்கமாக சுற்றிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தின் பின்னர் இரணைப்பாலைப் பகுதியில் சரமாரியான துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. அதனைத் தொடர்ந்து இரணைப்பாலையை நோக்கி கிபிர் விமானங்கள் குண்டுகளைக் கொட்டித்தீர்க்க தொடங்கின. பயங்கரமான நெருப்படி. எங்கேயோதானே சண்டை நடக்குதென அசண்டையீனமாக இருக்க முடியாது. விதிமுறைகளை மீறிய போர்முறை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

சிங்கள அரசின் பிரதான நோக்கம் சனங்களைக் கொல்வதிலேயே இருந்தது. அதனாலேயே பாதுகாப்பு வலயம் என அறிவித்தல்களை வழங்கி அங்கே நம்பிச்சென்ற அப்பாவி மக்களைக் கொன்று குவித்து விட்டு புலிகளைக் கொன்றதாக மார்தட்டியது. அவர்களைப் பொறுத்தவரை அனைவருமே புலிகளாக இருந்தனர். அவர்கள் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட இடங்களில் இறந்தவர்களில் பெண்கள் குழந்தைகள் சிறுவர்கள் வயோதிபர்கள் என பட்டியல் இருந்தது. பிறந்த குழந்தையும் புலி. பாதுகாப்பு வலயத்தில் தானே எனது மூன்று வயதே நிரம்பிய குழந்தையின் உயிரும் பறிக்கப்பட்டது. அவன் எந்தக் களத்தில் புலியாக நின்றான்? ஆயுதம் ஏந்திப் போராடும் வயதா அவனுக்கு?

கிபிர் விமானங்கள் இரணைப் பாலையை தாக்கிக் கொண்டு திடீரென வலைஞர்மடம் கடற்கரைப் பகுதியை நோக்கி பதிந்து நிமிர்ந்தது. கிபீர் விமானங்கள் மிகையொலி விமானங்கள். அவை பதிந்து எழும்போது காதை வந்தடையும் அந்த கர்ணகொடூர சத்தம் நெஞ்சைப் பிளந்தெறியும் இயல்புடையது. ஆரம்பத்தில் சத்தத்தை கேட்டே புரண்டு உருண்டு கதறும் மனநிலை இப்போது யாருக்கும் இல்லை. ஆனால் பயமிருந்தது. உயிர்மேல் ஆசை இருந்தது. கிபீர் விமானங்கள் சென்று விட்டன.

இரவு கிபீர் விமானங்களை நிகர்த்த சத்தத்தோடு அம்பலவன் பொக்கனை பகுதியில் இருந்து விமானங்கள் எழும் சத்தம். மாலையில் கூடைப்பந்து திடல் வரைகிறார்கள் என பேசிக்கொண்ட இடத்திலிருந்து வான்புலிகள் விமானமேறி பறந்து கொண்டிருந்தனர். நாங்கள் இருந்த பிள்ளையார் கோவிலடியும் அம்பலவன் பொக்கனை பிள்ளையார் கோவிலடியே. அருகில் புதுமாத்தளன் இருந்தது. எப்பிடியும் விடிய பிரளயம் நடக்க வாய்ப்பு உண்டு. இவர்கள் போய் தாக்கிப்போட்டு வர இங்கு கண்மூடித்தனமாக அடித்து தொலைக்க வாய்ப்பிருந்தது. அதிகாலையில் கொழும்பில் வான்புலிகள் தாக்கிய செய்தி அறிந்தபோது வண்டும் (வேவு விமானம்) சுற்றத்தொடங்கியது.


மக்கள் குடியிருப்புகளை நோக்கி இலக்கின்றிய குண்டுகள் விழுந்து வெடிக்கத்தொடங்கின. பற்றைகளிலும் காட்டுப் பகுதிகளிலும் எந்தவித பாதுகாப்பு அகழிகளும் அமைக்காதிருந்த பலர் இறந்து சிதைந்து போயினர். அம்பலவன்பொக்கனை சற்று நீர் நிறைந்த இடமாக இருந்தது. வயல் வெளிகளில் சிறிய கிடங்குகளை தோண்டிய போது நீர் வரக்கூடிய இடமாக இருந்தது. அதேவேளை அடுத்திருந்த சில உயர்நிலப்பகுதிகள் வைரம் பாய்ந்த பகுதிகளாக இருந்தன.

பதுங்குகுழி அமைப்பதில் சிரமம் இருந்தது. சிலர் தண்ணீரை அள்ளிச் சென்று ஊற்றி ஊறவிட்டு கிண்டி பதுங்குகுழி அமைத்திருந்தனர். வாழ்வதற்கு போதிய இடப் பற்றாக்குறை நிலவியது. சனச்செறிவு நிறைந்திருந்தது. இதனால் போரின் இறுதிக்காலங்களில் அங்கு விழும் குண்டுகள் உயிர்கள் பலவற்றை காவுகொண்டன.

(சாட்சியம் நீளும்)

# கால அவகாசமும் கண்காணிப்பு காலமும்

■ யோகநாராயணன்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகி இடம் பெற்று வருகின்றது. குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கூட்டத்தொடராக இது பார்க்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானம் நிறைவேற்றப்படாத நிலையில் 2017 ஆம் ஆண்டு 34/1 தீர்மானத்தின் மூலம் தீர்மானத்தை நிறைவேற்ற மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. மேற்படி கால நீடிப்புக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூடி பல தமிழ் அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தன. தற்சமயம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 4 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவுபெறும் நிலையிலும் கூட தீர்மானத்தின் முக்கிய அம்சங்கள் எதுவும் சர்வதேசத்தையோ, தமிழ்மக்களையோ திருப்திப்படுத்ம் வகையில் நிறைவேற்றப்படவில்லை.

அப்படியான ஒரு நிலையில் இலங்கையின் அரசாங்கத் தரப்பிலிருந்து இருவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. ரணில் தலைமையிலான அமைச்சரவையின் தரப்பில் மேற்படி தீர்மானம் தொடர்பாக சில திருத்தங்களைக் கோரவுள்ளதாகவும் மேலும், கால அவகாசம் கோரவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இன்னொரு புறம் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மேற்படி தீர்மானத்திலிருந்து இலங்கை வெளியேற வேண்டும் எனவும் தமது பிரச்சினை தொடர்பாக தாமே முடிவெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் இலங்கை விடயங்களில் சர்வதேச தலையீடு இருக்கக்கூடாது எனவும் கூறி வருகிறார்.

இரு தரப்பினரும் தமது பிரதிநிதிகளை மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு அனுப்பியுள்ளனர். இதேவேளையில் தமிழர் தரப்பில் இலங்கை அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற குரலே மேலோங்கி நின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மட்டுமின்றி தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களும்கூட கால அவகாசம் வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில் மேற்படி விடயம் சம்பந்தமாக ஆராய்வதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் அதன் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. அதில் சம்பந்தன் இலங்கை மீதான சர்வதேச கண்காணிப்பு அவசியம் எனவும் போர்க் குற்ற விசாரணை அவசியம் எனவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்காது மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டு விட முடியாது எனவும் வெகு காட்டமாகவே தெரிவித்திருந்தார்.

இதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் தாங்கள் வழங்குவது கால அவகாசம் அல்ல எனவும் இலங்கை மீதான கண்காணிப்பை நீடிப்பதாகும் எனவும் தனது சட்ட வல்லுநர் மொழியில் வியாக்கியானம் கொடுத்துள்ளார். இக்கூட்டம் முடிவடைந்த பின்பு கால அவகாசம் வழங்கக்கூடாதென ஓங்கிக் குரல் கொடுத்தவர்களில் பலர் அது கால அவகாசமல்ல, கண்காணிப்பு நீடிப்பு எனக் கூற ஆரம்பித்து விட்டனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை என்பது வெறுமனே கூடி உணர்ச்சிபொங்கும் உரைகளை நிகழ்த்திவிட்டுப் போய்விடும் ஒரு பொழுதுபோக்கு நிறுவனம் அல்ல. உலக நாடுகளில் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் அவை மீறப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றைத் தடுத்து நிறுத்தவும் உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். வல்லரசு நாடுகள் உட்பட உலக நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட இப்பேரவை வலிமைமிக்க ஒரு நிறுவனமாகும். இதை அவமதிப்பதானது உலக நாடுகளையே உதாசீனம் செய்ததற்குச் சமனானது.

எனவே அங்கு நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம் சரியானமுறையில் நடைமுறைப் படுத்தப்படாத நிலையில் கால அவகாசம் வழங்கப்பட்டும் செயற்படுத்தப்படாவிட்டால் மேலும் கால அவகாசம் வழங்குவது நிறுத்தப்படுமானால் அடுத்த கட்டம் எப்படி இருக்கும்?

சம்பந்தன் கூறியது போன்று குப்பைத் தொட்டிக்குள் போடப்படுமா? அல்லது தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் பொருளாதார நெருக்கடிகள் உட்பட அழுத்தங்கள் கொடுக்கப்படுமா? அங்கத்துவ நாடொன்று பேரவையின் தீர்மானத்தை உதாசீனம் செய்யும்போது அதை குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிட்டு அமைதியாக இருக்கும் அளவுக்கு மனித உரிமைகள் பேரவை என்ற சர்வதேச அமைப்பு கையாலாகாத வெறும் பொம்மையா?

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது அவரது அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை அலட்சியம் செய்தபோது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு ஒன்றை அமைக்கவில்லையா? ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கி வந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நிறுத்தவில்லையா? இவையெல்லாம் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை குப்பைத் தொட்டியில் போட்ட சம்பவங்களா? எனவே இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படாவிட்டால் ஐ.நா. சபை அத்துடன் விடயத்தை குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு முடிவுக்கு கொண்டுவந்து விடும் என்ற வாதம் அப்பட்டமான ஒரு ஏமாற்றாகும். அதுமட்டுமன்றி இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றொரு தோற்றப்பாட்டை ஏற்படுத்த எடுக்கும் நயவஞ்சக முயற்சியாகும்.

இதுவரை வழங்கப்பட்ட நான்கு வருட கால அவகாசத்தில் தீர்மானத்தின் எந்த ஒரு பகுதியும் ஆக்கபூர்வமான வழியில் நிறைவேற்றப்படவில்லை. சில விடயங்கள் செய்யப்போவதாகச் சொல்லி இழுத்தடிக்கப்பட்டு திசை திருப்பப்படுகின்றன. அல்லது மழுங்கடிக்கப்படுகின்றன. வேறுசில நீர்த்துப்போக வைக்கப்படுகின்றன. தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளும் முடுக்கிவிடப்படுகின்றன. இப்படியான நிலையில் மேலும் கால அவகாசம் வழங்கப்படுமானால் அது தமிழ் மக்களுக்கு சாதகமான பலன்களை அளிக்குமா?

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. இக்காலப்பகுதியில் அரசியல் கைதிகள் எத்தனையோதரம் போராட்டம் நடத்தியும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. மாறாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்பட்டு சித்திரவதை மூலம் பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் 100 வருடங்கள் 200 வருடங்கள் என சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனர். இது கால அவகாசம் அரசுக்கு வழங்கிய வரங்களில் ஒன்று.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் அமைப்பது தொடர்பாக 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எவ்வளவு காலத்தை இழுத்தடிக்க முடியுமோ அவ்வளவு இழுத்து 2018 இறுதிப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் அமைக்கப்பட்டது. அது அமைக்கப்பட்ட பின்பு மஹிந்த ஆட்சியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்த பரணகம ஆணைக்குழு முன்வைத்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நஷ்டஈடு வழங்கல் காணாமல் ஆக்கப்பட்டோர் என்பதற்கான சான்றிதழ் வழங்கல் அல்லது மரணச் சான்றிதழ் வழங்குவது பற்றியே பேசிக்கொண்டிருக்கிறது. இது அரசுக்கு கால அவகாசம் வழங்கிய இன்னொரு வரம்.


இதேபோன்று பொதுமக்களின் காணிகளை விடுவிக்கும் விடயத்திலும் சிறுபகுதிகள் விடுவிக்கப்பட்டு பெரிதாக விழா எடுக்கப்பட்டு பிரசாரம் செய்யப்படுகிறது. முக்கிய மீன்பிடி வலயங்களோ விவசாய நிலங்களோ விடுவிக்கப்படவில்லை. சொந்தக் காணிகளை விடுவிக்கும்படி கோரி மக்கள் நடத்தும் போராட்டங்கள் வருடக்கணக்காகத் தொடர்கின்றன.


இவை மட்டுமன்றி இன்னும் எத்தனையோ மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் உள்ள அம்சங்கள் நிறைவேற்றப்படவில்லை. என்பதுடன் அவற்றை நிறைவேற்ற மக்கள் போராட்டங்களை நடத்தியபோது நேர் விரோதமான காரியங்களே அரசால் நிறைவேற்றப்படுகின்றன. எனவே காலஅவகாசம் என்பது தமிழ்மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வழங்கப்படும் ஒரு காலப்பகுதி என்பதில் சந்தேகமில்லை.


காலஅவகாசம் வழங்கப்படாவிட்டால் சர்வதேச கண்காணிப்பு இல்லாமல் போய்விடும் என்பதோ கால அவகாசம் வழங்கப்பட்டால் அக்காலப்பகுதிக்குள் தீர்மானம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டு விடும் என்பதோ எவராலும் ஏற்றுக்கொள்ளமுடியாத ஒரு கூற்றாகும். இது சர்வதேச அழுத்தங்களிலிருந்து இலங்கையைக் காப்பாற்ற எடுக்கும் ஒரு முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது. ●

## திணறும் மக்கள் தொடரும் குழப்பம்

# வெனிசுலாவில் நடப்பது என்ன?








வெனிசுலா, கடுமையான நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. பொருளாதார வீழ்ச்சியால் அந்நாட்டு மக்கள் அல்லற்பட்டு வருகின்றனர். இது போதாதென்று, அரசியல் குழப்பங்கள் அந்நாட்டை ஆட்டிப் படைக்கின்றன.

தென்னமெரிக்க நாடான வெனிசுலா, எண்ணெய் வளம் மிக்க நாடு. என்ன வளம் இருந்தும் என்ன பயன். மோசமான அரசாங்கத்தின் நிர்வாகத்தால் செழிப்பான நாடும் ஒன்றுமில்லாமல் ஆகிவிடும் என்பதற்கு வெனிசுலா சிறந்த எடுத்துக்காட்டு. 2014 ஆம் ஆண்டில் இருந்தே நாட்டின் பணவீக்கம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து, இன்று பணவீக்கத்தின் உச்சத்தில் இருக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

இவை அத்தனைக்கும் காரணம், 2010 ஆம் ஆண்டு, வெனிசுலா ஜனாதிபதியாக இருந்த சாவேஸ் சகலதும் அரச மயமாக்கல் திட்டத்தை முன்னெடுத்ததுதான். தனியார் நிறுவனங்களிடம் இருந்தவற்றைப் பிடுங்கி அமைச்சகங்களிடம் ஒப்படைத்தார். ஆனால், அரசின் பிரதிநிதிகள் ஊழல் செய்து, அத்தனையையும் தங்கள் வீடுகளுக்குள் முடக்கிக் கொண்டனர்.

இதனிடையே, அரசியல் குழப்பங்கள் வேறு இன்றுவரை நீடிக்கின்றன. ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற நிகோலஸ் மதுரோ, எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பதவியேற்றார். தேர்தலில் முறைகேடுகள் நடந்தன என எதிர்க்கட்சிகள் தொடர்ந்து குற்றம் சாட்டின. மோதல் உச்சக்கட்டத்தை எட்டியது. வெனிசுலா நாடாளுமன்றத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த எதிர்க்கட்சித் தலைவரும் சபாநாயகருமான ஜுவான் குவைடோ, தன்னை நாட்டின் தற்காலிக ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்தார்.

குவைடோவுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஆதரவளித்தன. இதனால் ஆத்திரமடைந்த மதுரோ, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளைக் கண்டித்து, அந்த நாடுகளிடமிருந்து வரும் மனிதாபிமான உதவிகளை ஏற்க மறுத்துவிட்டார். அமெரிக்கா, இந்த விவகாரத்தை ஐ.நா சபைக்குக் கொண்டுசென்றது. வெனிசுலாவில் மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும், வெளிநாடுகளின் மனிதாபிமான உதவிகளை அனுமதிக்க வேண்டும் ஆகிய அம்சங்கள் அடங்கிய தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு சபையில் அமெரிக்கா கொண்டுவந்தது.


அமெரிக்காவின் தீர்மானத்தை ரஷ்யாவும் சீனாவும் தங்களின் வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை நிறைவேற்ற விடாமல் செய்துவிட்டன. இதனால், அந்நாட்டு மக்களுக்குக் கிடைத்துவந்த சிறுஉதவிகளும் கிடைக்காமல்போய்விட்டன. இந்தச் சூழலில், நாட்டில் பல்வேறு பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை 20 மணி நேரத்திற்கும் மேலாக மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதனால், அங்கிருக்கும் மருத்துவமனைகளில் நோயாளிகள் பலரின் உடல் நிலை மோசமடைந்தது.

பேருந்து, ரயில், உள்ளிட்ட சேவைகளும் முற்றிலும் முடங்கின. வணிக வளாகங்கள் மூடப்பட்டுள்ளன. வெனிசுலா தலைநகர் கராகஸிலேயே முழு மின் தடை ஏற்பட்டது. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மூடப் பட்டன. மருத்துவமனைகளில் ஜெனரேட்டர்களும் செயலிழந்துள்ளன. இதனால் கைபேசியில் உள்ள மின்சூள் (torch light ) வெளிச்சத்தைப் பயன்படுத்தி சத்திர சிகிச்சை செய்த அவலங்கள் அரங்கேறியுள்ளன. கராகஸில் ஒரு மருத்துவமனையில், ஆக்ஸிஜன் பற்றாக்குறையால் ஒரு பெண் உயிரிழந்தார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் சொல்கின்றன.

2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்படும் மிகப்பெரிய அளவிலான மின்சாரத் துண்டிப்பு என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. எனினும் கடந்த வார இறுதியில் மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டு வருகின்றது. நாட்டின் 70% மின்சார தேவையைப் பூர்த்திசெய்துவரும் பொலிவர் மாநிலத்தில் உள்ள கரி நீர்மின் திறன் அணையில் ஏற்பட்ட பாதிப்பால், மிகப் பெரிய அளவிலான மின் தடையை ஏற்படுத்தியுள்ளதாக ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. மின் நிலையங்கள் பராமரிப்பில், போதுமான முதலீடு செய்யாததால், இப்படி நடப்பதாக அந்நாட்டு மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கராகஸ் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர், நாட்டின் மின் தடை குறித்து சமூக வலைதளங்களில் பகிர்ந்திருந்தார். அதில், 'கடந்த வியாழக்கிழமை திடீரென மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. சிறிது நேரத்தில் வந்துவிடும் என்று நினைத்தோம். பிறகுதான் நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டுள்ளது தெரியவந்தது. என் வீட்டின் அருகிலிருந்த மருத்துவமனையில், இன்வெர்ட்டரும் செயலிழந்ததால் பெரும் துயரத்துக்கு மக்கள் ஆளாகினர். என் தோழிக்கு புற்றுநோய்க் கட்டி இருந்ததால், கால்கள் அகற்றப்பட்டன. கடந்த மூன்று மாதங்களாக ஹீமோ சிகிச்சைக்கும் கருவியில் கோளாறு என்று சிகிச்சை எடுத்துக்கொள்ளாமலேயே இருந்தாள். வேறு மருத்துவமனைக்குச் செல்லும் அளவுக்கு வசதி இல்லை. நேற்றுத்தான் ஹீமோ கருவி சரி செய்யப்பட்டுவிட்டதாக அவளை வரச் சொன்னார்கள். கடைசியில் மின்தடை ஏற்பட்டுவிட்டது. இந்த முறையும் அவளால் ஹீமோ சிகிச்சை எடுத்துக்கொள்ள முடியவில்லை" என்றார் வருத்தத்துடன்.

வெனிசுலாவின் இந்த நிலைக்கு, அந்நாட்டு அரசாங்கத்தின் மோசமான நிர்வாகத்திறன் மட்டும் காரணமல்ல, நட்பு நாடுகளின் சூழ்ச்சியும்தான். மின் தடையால் இருட்டடிப்பு ஏற்பட்ட இடங்களுக்கு வெளிச்சம் வந்துவிட்டது. ஆனால், இருட்டடிப்பு செய்யப்பட்டுவரும் மக்களின் எதிர்காலம்?



# விரதம் தரும் நன்மைகள்






நம் முன்னோர் பக்தியையும் விரதத்தையும் ஒன்றுடன் ஒன்று இணைத்திருக்கிறார்கள். இறைவனை வழிபட்டு, குறிப்பிட்ட நாளில் சாப்பிடா மலிருப்பது, நீர் மட்டும் அருந்துவது, குறிப்பிட்ட உணவைச் சாப்பிடுவது, சிலவற்றைச் சாப்பிடாமல் இருப்பது என விதவிதமான விரதங்கள் இருக்கின்றன.

உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்களும் விரதமிருப்பார்கள். 'குறிப்பிட்ட முறையில் விரதமிருந்தால், இவ்வளவு எடை குறையும்' என்று கணக்குப் போட்டுச் சாப்பிடாமல் இருப்பவர்களும் உண்டு. சமீபத்தில் வெளியான ஓர் ஆய்வறிக்கையின்படி, விரதமிருப்பதால் மனிதர்களின் வளர்சிதை மாற்றச் செயற்பாடுகள் மேம்படக்கூடும். அன்டி ஆக்ஸிடன்ட்களின் உருவாக்கம் அதிகரிக்கக்கூடும். வயது அதிகரிப்பதன் விளைவுகள்கூட இதனால் மாறக்கூடும். விரதமிருப்பவர்களின் இரத்தம், பிளாஸ்மா, சிவப்பணுக்களை ஆராய்ந்து பார்த்தபோது இந்தச் சாத்தியக்கூறுகள் தெரியவந்திருக்கின்றன.

# எடையைக் குறைக்குமா இரவுநேர நடை?

பொதுவாக, காலை அல்லது மாலையில் நடைப்பயிற்சி செய்வது இயல்பு. ஆனால், 'இரவு உணவுக்குப் பிறகு நடைப்பயிற்சி செய்தால் உடல் எடை குறையும்' என்றொரு நம்பிக்கை பரவிவருகிறது. இதுபற்றி நிபுணர்கள் விளக்கமளிக்கிறார்கள்.


சாப்பிட்ட உணவு வயிற்றினுள் செல்லும்போதே சமிபாட்டுக்கான திரவங்கள் சுரக்கத் தொடங்கி, ஜீரணத் தசைகளும் செயற்படத் தொடங்கிவிடும். சாப்பிட்டதும் உறங்கச் செல்வது, அசைவின்றி உட்கார்ந்திருப்பது போன்றவற்றால் வயிற்றுப் பகுதியில் கூடுதல் அழுத்தம் ஏற்பட்டு, உணவு சமிபாடு அடைய அதிக நேரம் எடுக்கும்.

எனவே, இரவு உணவுக்குப் பிறகு நடைப்பயிற்சி மேற்கொண்டால் சமிபாடு எளிதாகும். இதைப் பழக்கப்படுத்திக்கொண்டால், உடல் எடை குறையும் உடல் எடையைச் சரியாக நிர்வகிக்கவும் முடியும் என்கின்றன சில ஆய்வு முடிவுகள். எனவே, இரவில் சாப்பிட்ட பிறகு 10 - 15 நிமிடங்கள் நடக்கலாம்.

இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும் என்பதால், நீரிழிவு நோயாளிகள் இரவு நடையைப் பின்பற்றலாம். ஒரு நாளைக்கு 30 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்ய வேண்டும். நீரிழிவு நோயாளிகள் காலை, மதியம், இரவு உணவுக்குப் பின்னர் என தலா 10 நிமிடங்களாகப் பிரித்துக்கொள்ளலாம். இதய நோயாளிகள், சாப்பிட்டவுடன் எதுக்களித்தல் பிரச்சினை இருப்பவர்கள் மருத்துவரின் ஆலோசனை பெற்று நடைப்பயிற்சி மேற்கொள்வது நல்லது.

# உணவே மருந்து

## ஆவாரம் பூ சட்னி



'ஆவாரை பூத்திருக்க சாவாரைக் கண்டதுண்டோ!' என்றொரு பழமொழி இருக்கிறது. ஆவாரை பூத்திருந்தாலே போதும், அந்தப் பூவின் மணமே மனிதரின் ஆயுளை அதிகரிக்கும் என்பதை இந்தப் பழமொழி உணர்த்துகிறது. ஆவாரம்பூ உடல்சூட்டைப் போக்க நல்ல மருந்து. பூ முதல் வேர்வரை அனைத்துமே உடலுக்கு நன்மை அளிக்கக்கூடியவை.

**தேவையானவை:**

ஆவாரம்பூ : ஒரு கைப்பிடி
தேங்காய்த்துருவல் : ஒரு கப்
செத்தல் மிளகாய் : 2
புளி, உப்பு : சிறிது
பூண்டு : 2 பல்
தாளிக்க:
எண்ணெய் : ஒரு மே.கரண்டி
கடுகு : கால் மே.கரண்டி
உளுத்தம் பருப்பு : கால் மே.கரண்டி

செய்முறை:

அடுப்பில் சட்டியை வைத்து எண்ணெய்விட்டு சூடாக்கி, அதில் தேங்காய்த் துருவல், செத்தல் மிளகாய், பூண்டு, ஆவாரம் பூ, புளி, உப்பு என ஒன்றன் பின் ஒன்றாகப் போட்டு, கருகிவிடாமல் வதக்கவும். ஆறிய பிறகு, மிக்ஸியில் அரைத்தெடுக்கவும். தாளிக்கும் கரண்டியில் சிறிது எண்ணெய் ஊற்றி சூடாக்கி அதில் கடுகு, உளுத்தம் பருப்பு போட்டுத் தாளித்து, சட்னியில் சேர்த்துப் பரிமாறவும்.

குறிப்பு: புதிய ஆவாரம்பூ கிடைக்கவில்லை என்றால், நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கிற உலரவைத்த பூவையும் பயன்படுத்தலாம்.

பலன்கள்: ஆவாரம்பூ உடல் சூடு தணிக்கும். நா வறட்சி நீக்கும் கண் எரிச்சல் தீர்க்கும். மூலநோய் குணமாக உதவும். சருமப் பொலிவுக்கு உதவும். உடலை பலப்படுத்தும். நீரிழிவு நோயின் தாக்கத்தைக் குறைக்கும்.

# வாரபலன்

### மேடம்
வார துவக்கத்தில் மனச் சஞ்சலத்தைக் கொடுத்தாலும் இறுதியில் மன நிம்மதியை ஏற்படுத்தும். மனதில் கோபமும் எரிச்சலும் உண்டாகும், படிப்புக்காக வெளிநாடு செல்லும் நிலை உண்டாகும். யாருக்கும் பணம் கடன் கொடுக்க வேண் டாம். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும்.

### துலாம்
வீண் செலவுகள் ஏற்படும் கவனம் தேவை, சந்திரன் சஞ் சாரம் வார மத்தியில் சாதக மாக இல்லை. சகோதரர்களால் திடீர் தொல்லைகள் ஏற்படும். வண்டி வாகனங்களில் செல்லும் போது நிதானம் தேவை. தொழில் வியாபாரம் சிறப் படையும். விவசாயம் சிறப்படையும்.

### ரிஷபம்
எல்லா செயல்களும் வெற்றியடையும். சிலருக்கு வேலை நிரந்தரமாகும். பதவி உயர்வும் தேடி வரும். மனதில் நிம்மதி ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை மூலம் பண வரவு உண்டாகும். வேலைச்சுமையால் உடலில் அசதி ஏற்படும்.

### விருச்சிகம்
அரச யோகம் உண்டாகும். சகோதரர்களுடன் சச்சரவு உண்டாகலாம். கொமிஷன் தொழில் விருத்தியடையும். மனதில் மகிழ்ச்சி குடியேறும். சிறு உல்லாசப் பயணம் செல்வீர்கள். குடும்பத்தில் சந்தோ ஷம் அதிகரிக்கும். பண வரவு அதிகரிக்கும்.

### மிதுனம்
அரசு தொடர்பான பயணம் உண்டாகும். சிலருக்கு வேலை விசயமாக வெளிநாடு பயணம் செய்ய வேண்டியிருக்கும். மனதில் அமைதி குடியேறும். நினைத்தது நிறைவேறும். கல்வியில் மேன்மை உண்டாகும். எதிரிகளை வெல்வீர்கள்.

### தனுசு
தொழில் முறை பயணம் உண் டாகும். சமனதில் அமைதி குடியேறும் நிம்மதி பிறக்கும். உறவினர்களின் வருகை அதிகரிக் கும்.கல்வியில் மேன்மை நிலை உண்டாகும். ஆன்மீக திருப்பணிகளில் ஈடுபாடு உண்டா கும். தொழிலில் லாபம் அதிகரிக்கும்.

### கடகம்
இந்த வாரம் சாதகமான நிலையில் காணப்படுகிறது. மனதில் நிம்மதியும் அமைதியும் பிறக்கும். தொழிலில் லாபம் வரும். பணிபுரியும் அலுவலகத்திலிருந்து நல்ல தகவல் வரும். ஆன்மீகப் பயணம் செல்வீர் கள். பெண்களால் அதிர்ஷ்டம் அதிகரிக்கும்.

### மகரம்
தந்தைவழியில் பண வரவு உண்டாகும்.. புதிதாக வீடு வாங்கும் யோகம் உண்டா கும். படிப்பில் கவனம் அதிகரிக் கும். குரு தொழிலில் லாபம் அதிகரிக்கும். மனதில் கணவன் மனைவி அன்னியோன்னியம் அதிகரிக்கும். வெளியூர் பயணம் செல்வீர்கள்.

### சிம்மம்
தொழில் நிமித்தம் பயணம் செல்வீர்கள். வாழ்க்கைத் துணையுடன் சச்சரவு வேண்டாம். மனதில் குழப்பம் உண்டாகும். தல யாத்திரை செல்வீர்கள். பூர்வீகச் சொத்தில் இருந்து லாபம் வரும்.பெண்களின் மனதில் லேசான கலக்கம் ஏற்படும்.

### கும்பம்
உயர் அதிகாரிகளின் உதவி கிடைக்கும். மனதில் தெளிவும் அமைதியும் பிறக்கும். பேச்சில் வசீகரம் அதிகரிக்கும். பேச்சிற்கு மதிப்பு கிடைக்கும். தந்தை வழியில் வருமா னம் கிடைக்கும். வீட்டிற்கு ஆடம்பரப் பொருட்களை வாங்குவீர்கள். எல்லா செயல்களும் வெற்றிகரமாக நிறைவேறும்.

### கன்னி
பெண்களுக்கு மனதில் தெளிவும் அமைதியும் ஏற் படும். மாணவ, மாணவிகள் கல்வியில் அக்கறை செலுத்த வும். உடம்பில் சோர்வு அசதி உண்டாகும். கடன் பிரச்சினைகள் தீரும். அலைச்சல் அதிகரிக்கும். சமூகத்தில் உயர் நிலையடைவீர்கள்.

### மீனம்
வாரத் துவக்கம் சாதகமாக இல்லை. மனதில் கலக்கம் ஏற்படும் அமைதி காக்கவும். சகோதரர்களால் பதவி உயர்வு கிடைக்கும். ஒப்பந்தத் தொழில் சிறப்படையும். அதிர்ஷ்டம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையினால் லாபம் அதிகரிக் கும்.



யாழ்.பல்கலைக் கழகச் சமூகம் ஏற்பாடு செய்துள்ள போராட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊர்த்திப் பயணமானது 14.03.2019 அன்று கிளி நொச்சியை வந்தடைந்தபோது.

## கனகபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் பொதுக்கூட்டம்

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை (2019. 03. 23) பி.ப. 2.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் வளர்ச்சி கருதி தவறாது இக்கூட்டத்தில் அனைத்து பழைய மாணவர்களையும் சமூகமளிக்குமாறும், அத்துடன் பாடசாலையின் பொன்விழா நிகழ்வு தொடர்பான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க செயலாளர் அ.றெஜிஅலோசியஸ் கேட்டுள்ளார்.



பலாலி புனித செபஸ்தியார் ஆலயம், அதை சூழவுள்ள மக்களின் காணிகளையும் இராணுவத்திடம் இருந்து மீட்டுத் தருமாறு கோரி வடக்கு ஆளுநர் சுரேன் ராகவனிடம் ஜே/255, ஜே/256 கிராம சேவையாளர் பிரிவுகளின் மக்கள் கடந்த புதன்கிழமை மனு கையளித்தபோது...



கடந்த மாதம் இந்தியாவின் - திருவனந்த புரத்தில் நடைபெற்ற ஆசிய மட்ட உருள் பந்து போட்டிகளில் இலங்கை அணி சார்பில் கலந்துகொண்ட கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த கிளிநொச்சி மாணவிகளான நடராசா வினுசா, தினகராஜா சோபிகா ஆகியோர் மூன்றாவது இடத்தைப் பிடித்து வெற்றி பெற்றனர்.



வவுனியா வடக்குக் கல்வி வலயம் ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், நான்கு வெண்கலப் பதக்கம் என மொத்தமாக ஆறு பதக்கங்களைப் பெற்று வட மாகாணத்தில் முதலிடத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது.

# அகங்காரம் கொள்வது முட்டாள்தனம்

ஒரு நாள், ஏழை விவசாயி ஒருவர் அருகில் உள்ள கிராமத்திற்கு நடந்து சென்றார். அது ஒரு கோடை காலம். வெயில் சுட்டெரித்து விவசாயிக்கு பசி வயிற்றைக்கிள்ளியது. வெயில் காரணமாக தண்ணீர் தாகமும் எடுத்தது. சோர்வடைந்த அவர், சாலை ஓரத்தில் இருந்த மரத்தடியில் நிழலில் ஒதுங்கினார். அப்போது அங்கு ஒரு இளைஞன் வந்தான். அவன் மெத்தப்படித்த மேதாவி. தனக்கு மட்டுமே எல்லாம் தெரியும் என்ற எண்ணம் கொண்டவன். தான் சந்திக்கும் நபர்களிடம் தனது புத்திசாலித்தனத்தை தானே மெச்சிக் கொள்வது அவன் வழமை.

மேலும் தனக்கு தெரியாதது எதுவும் இல்லை என்று ஆணவம். அப்படி தெரிந்தால் அதை தனக்கு கூறுமாறு பிறரிடம் கேட்பான். அவனது இந்த ஆணவப்பெருக்கை அறிந்த பலரும் அவனைக்கண்டால் ஒதுங்கிச் செல்லத் தொடங்கினார்கள். இதை தனக்கு சாதகமாக எடுத்துக் கொண்ட அந்த இளைஞன், தன்னைப்போல சிறந்த கல்வியாளர் யாரும் இல்லை என்ற அகந்தயுடன் இருந்தான். அந்த இளைஞன் மரநிழலில் ஒதுங்கி




இருந்த விவசாயியை பார்த்தான். உடனே அவரிடம் பேச ஆரம்பித்தான். ஐயா விவசாயி நான் நிறைய படித்திருக்கிறேன். எனக்கு எல்லாமே தெரியும். இருந்தாலும் எனக்கு தெரியாத எதுவும் உங்களுக்கு தெரிந்தால் அதை கூறுங்கள் பார்க்கலாம் என்று ஆணவத்துடன் பேசினான். அந்த இளைஞனின் ஆணவம் குறித்து அந்த விவசாயி ஏற்கனவே அறிந்திருந்தார். எனவே அவர் அமைதியாக இருந்தார்.

(மீதி அடுத்த வாரம்)





# அறிந்து கொள்வோமே!
## வைரச் செய்திகள்

வைரம் என்பது மிக உயர்ந்த விலையுள்ள ஆபரணம் ஆகும். பூமிக்கு அடியில் புதைந்துள்ள இறுகிப்போன நிலக்கரியில் இருந்துதான் இந்த அரிய வகை வைரம் நமக்கு கிடைக்கிறது. ஆனால் பூமிக்கு அடியில் 90 மைல் தொலைவில்தான் இந்த வைரம் இருக்கும். 2 மைல் தொலைவில் வெறும் நிலக்கரி மட்டும்தான் கிடைக்கும். வைரம் அதிக கடினத்தன்மை வாய்ந்தது என்பதால், வைரத்தை வைரத்தால் மட்டுமே அறுக்க முடியும்.இந்தியாவில் கோகினூர் என்ற இடத்தில் எடுக்கப்படும் வைரம் மிகவும் தரம் வாய்ந்ததாகவும், விலை உயர்ந்ததாகவும் உள்ளது. தற்போது ஆப்பிரிக்காவில் உள்ள கிம்பர்லி என்ற இடத்திலிருந்தும் வைரம் வெட்டி எடுக்கப்படுகிறது.

# அட அப்படியா?

1. கரப்பான்பூச்சி தலையின்றி பத்து நாள் வரை உயிர் வாழும்
2. விரல்களில் நகங்கள் வளர்வது இயற்கை. அதில் ஆட்காட்டி விரலில் மிக நிதானமாகவும், நடுவிரலில் மிக வேகமாகவும் வளருமாம்.
3. நான்கு வயது குழந்தை நாளைக்கு நானூறு கேள்விகள் கேட்கின்றதாம்.
4. ஒவ்வொருவரின் கை ரேகையும் தனித்துவமானது. அதே போல தான் நா ரேகையும்
5. பன்றிகள் தானாக வானத்தை பார்ப்பது சாத்தியமே இல்லை.






# தெரியுமா தம்பி?

நெட்டையான காலுடனே
நீள மான கழுத்துடனே
சுட்டுப் பொசுக்கும் மணலில்கூடச்
சுமையைத் தூக்கிச் செல்லும்அது
என்ன தெரியுமா?-தம்பி
என்ன தெரியுமா?

முறத்தைப் போன்ற காதுடனே
முகத்தில் ஒற்றைக் கையுடனே
உரலைப் போன்ற காலுடனே
ஊர் வலத்தில் வருமேஅது
என்ன தெரியுமா?-தம்பி
என்ன தெரியுமா?

# கேள்விக்கென்ன பதில்?




1. சூரிய வெளிச்சம் பூமிக்கு வர எவ்வளவு நேரம் எடுக்கும்?
2. பூமியில் 3 அடி பாய்பவனால் சந்திரனில் எத்தனை அடிகள் பாயமுடியும்?
3. சந்திரன் பூமியைச் சுற்றிவர ஆகும் காலம் என்ன?
4. ஒரு வெளிச்ச ஆண்டின் தூரம் எவ்வளவு?
5. மங்கிய வெளிச்சம் கொண்ட கிரகம் எது?

**பதில்கள்**

1) 8 நிமிடங்கள். 2) 18அடி 3) 27நாள் 7மணி 43நிமி. 14 வினாடி 4) 5,880,000,000,000 மைல் 5) நெப்டியூன். பூமியில் விழுவதில் 90இல் ஒரு பங்கு வெளிச்சமே இங்கு விழுகின்றது.

# ஆங்கிலம் கற்போம்




மேலும் சில ஆங்கில வாக்கியங்களும், அவற்றிற்க நிகரான தமிழ் வாக்கியங்களும் கீழே தரப்புட்டுள்ளன.

1. He can speak in English.

1a.. He is able to speak in English.

அவனுக்கு ஆங்கிலத்தில் பேச முடியும் .

2. He can't speak in English.

2a. He is unable to speak in English

அவனுக்கு ஆங்கிலத்தில் பேச முடியாது .

3. He could speak in English.

3a. He was able to speak in English.

அவனுக்கு ஆங்கிலத்தில் பேசமுடிந்தது .










# ஒரு குறள் - மூவர் உரை



**குறள் 42:**

**துறந்தார்க்கும் துவ்வாத வர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை.**

**மு. வரதராசன் உரை:**

துறந்தவர்க்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவன் துணையாவான்.

**கலைஞர் உரை:**

பற்றற்ற துறவிகட்கும், பசியால் வாடுவோர்க்கும், பாதுகாப்பற்றவர்க்கும் இல்லற வாழ்வு நடத்துவோர் துணையாக இருத்தல் வேண்டும்.

**சாலமன் பாப்பையா உரை:**

மனைவியோடு வாழ்பவன்தான் துறவியர், வறுமைப்பட்டவர், இறந்து போனவர் என்பவர்க்கும் உதவுபவன்.




# கொடுத்தால் குறையுமா...?

'கொடுத்தால் குறையும்' என்று தப்புக் கணக்குப் போடுகிறான் மனிதன். 'அள்ளிக் கொடு, உன்னை வள்ளலாக்குவேன்' என்று சொல்லும் இந்த அழகான திருக்குர்ஆனின் உவமையின் மூலம் பாறை நெஞ்சங்களிலும் ஈரத்தை சொட்ட வைக்கிறான் இறைவன்.

இதில் 71 இடங்களில், வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களுக்கு உங்கள் செல்வத்திலிருந்து வழங்குங்கள் என்று திரும்பத் திரும்ப அல்லாஹ் குறிப்பிடுகின்றார். இதில் வசதியுள்ளவன் கட்டாயமாக ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டிய செல்வத்தின் பங்கு ஜகாத், தன் விருப்பத்தின் பேரில் அல்லாஹ்வுக்காக வாரி வழங்கும் ஸதகா ஆகிய இரண்டும் இணைந்துள்ளன.

ஜகாத் எனும் அரபு சொல்லுக்குத் தூய்மை செய்தல் என்று பொருள். ஸதகா எனும் சொல்லும் உண்மை, தானம் என்ற பொருளில் ஒருவன் மனமுவந்து கொடுக்கும் செல்வத்தைக் குறிக்கிறது. எவரொருவர் அளவாகச் சாப்பிட்டு, அதற்கேற்பத் தனக்காகவும் தன்னைச் சார்ந்தவர்களுக்காகவும் உடலை உழைப்பினால் உபயோகப்படுத்துகிறாரோ அவர் நோயற்ற பெருவாழ்வைப் பெறுகின்றார்.

'தான தர்மங்கள் மனிதனைத் திடீர் இயற்கைச் சீற்றத்திலிருந்தும், அகால மரணத்திலிருந்தும் காப்பாற்றுகிறது' என்று பல நபிமொழிகள் பதிவாகியுள்ளன. இதுதான் தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும் எனத் தமிழில் சுட்டிக்காட்டப்படுகிறது. செல்வத்தைச் சேமிக்கச் சிறந்த இடம் ஏழைகளின் வயிறுகள்தான்.

# மங்கலங்கள் நிறைந்த மாதம் எடுத்த காரியங்களில் வெற்றி...!

பங்குனி. மான்- மழு ஏந்தியவர் மலைமகளை மணம் புரிந்த மாதம். ஆயிரம் பசு மாடுகளை தானம் செய்த புண்ணியம் தரும் மாதம். தடைகளை நீக்கி வெற்றி அருளும் மாதம். திருஅரங்கரை விபீஷணர் பெற்ற மாதம். திருஅரங்கர், திருஅரங்கத்தை அடைந்த மாதம். இவ்வளவு மகத்துவங்கள் நிறைந்த பங்குனியில் நாம் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய விரதங்கள் இரண்டு உண்டு.


விஜயா ஏகாதசி: எந்த விதத் தடங்கல் இருந்தாலும் அதை நீக்கி, எடுத்த காரியத்தில் வெற்றியை அளிக்கக் கூடியது விஜயா ஏகாதசி. பங்குனி மாதத் தேய்பிறையில் வருவது இது. கோரிக்கைகளை நிறைவேற்றி, பலன்களை அளிப்பது இந்த விஜயா ஏகாதசி.

ஒரு வாழை இலையில் ஏழு விதமான தானியங்களை (எள் சேர்க்காமல் என்றும் சொல்வது உண்டு), ஒன்றின் மேல் ஒன்றாகப் பரப்ப வேண்டும். அதன் மீது ஒரு கலசத்தை வைத்து, அதில் நாராயணரின் திருவடிவை வரைந்து முறைப்படி வழிபட வேண்டும். மறுநாள் துவாதசி அன்று, ஒரு சாது அல்லது ஏழைக்கு உணவு அளித்து, பூஜை செய்த கலசத்தையும் தானியங்களையும் அவருக்குத் தர வேண்டும். அதன் பிறகே நாம் உணவு உண்ண வேண்டும்.

'கடல் கடந்து இலங்கை சென்று ராவணனுடன் போரிட்டு, சீதையை எப்படி மீட்டு வருவது?' என்று ராமர் சிந்தனையில் ஆழ்ந்தபோது, முனிவர் ஒருவர் அவரிடம் இந்த விஜயா ஏகாதசி விரதத்தை அனுஷ்டிக்கச் சொன்னார். அதன்படி விரதம் இருந்து ராமர், சீதையை மீட்டு வந்தார் என ஏகாதசி விரத மகாத்மியம் கூறுகிறது.

ஆமலகீ ஏகாதசி: பங்குனி மாத வளர்பிறையில் வரும் ஏகாதசி, ஆமலகீ ஏகாதசி எனப்படும். இந்த நாளில் உபவாசம் இருந்து நெல்லி மரத்தின் அடியில் தூய்மை செய்து, அங்கு பரசுராமனின் திருவடிவம் வரையப்பட்ட கலசத்தைப் பிரதிஷ்டை செய்து, முறைப்படி வழிபட வேண்டும்.

அதன் பிறகு நெல்லி மரத்தை வலம்



வந்து வணங்க வேண்டும். இவ்வாறு வழிபட்டவர்களுக்கு, ஆயிரம் பசுமாடுகளை தானம் செய்த புண்ணியம் கிடைக்கும். ஒரு 'கோ'தானமே அனைத்தையும் அருளும் என்றால், ஆயிரம் கோதான பலன் பற்றிச் சொல்லவா வேண்டும்!

# உண்மைச் செல்வம் எது?


சாலமோனுக்குப் பின் தோன்றிய இறைமகன் இயேசு, நிலையற்ற செல்வம் பற்றியும் நிலையான நிஜமான செல்வம் பற்றியும் எடுத்துரைத்துள்ளார். இதை மத்தேயு அதிகாரம் ஆறில் காண முடியும். செல்வந்தர்களின் பட்டியலில் இடம்பிடிக்க வேண்டும் என்று ஓடுகிறவர்களைப் பார்த்து இயேசு சொன்னார்:

"பூமியில் உங்களுக்காக பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதை நிறுத்துங்கள். பூச்சியும் கறையானும் அவற்றை அரித்துவிடும். திருடர்களும் அவற்றைத் திருடிப்போய் விடுவார்கள். மாறாக, பரலோகத்தில் உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியோ கறையானோ அரிக்காது, திருடர்களும் திருடிக்கொண்டு போக மாட்டார்கள். உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்" என்றார்.


**இன்று ஒருபுறம் மக்கள் உணவு இல்லாமல் செத்துக்கொண்டிருக்க, இன்னொரு பக்கம் உணவு வீணாக்கப்படும் சூழ்நிலையைப் பார்க்கிறோம். அதேபோல, தேவையான உணவு என்ற மனநிலை போய் ஆடம்பரமான** அதிக கொழுப்பு நிறைந்த உணவை நோக்கி ஓடுகிறோம். இயேசுவோ உங்கள் உணவுக்காகக் கவலைப்படாதீர்கள் என்று சொன்னார்.

"நான் உங்களுக்குச் சொல்கிறேன், எதைச் சாப்பிடுவது, எதைக் குடிப்பது என்று உங்கள் உயிருக்காகவும், எதை உடுப்பது என்று உங்கள் உடலுக்காகவும் கவலைப்படுவதை நிறுத்துங்கள். உணவைவிட உங்கள் உயிரும் உடையைவிட உங்கள் உடலும் அதிக முக்கியம் அல்லவா? வானத்துப் பறவைகளைக் கவனியுங்கள் அவை விதைப்பதும் இல்லை, அறுவடை செய்வதும் இல்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைப்பதும் இல்லை.

என்றாலும், உங்கள் பரலோகத் தந்தை அவற்றுக்கும் உணவளிக்கிறார். அவற்றைவிட நீங்கள் அதிக மதிப்புள்ளவர்கள் அல்லவா? கவலைப்படுவதால் உங்களில் யாராவது தன் ஆயுளோடு ஒரு நொடியைக் கூட்ட முடியுமா? உடைக் காக ஏன் கவலைப்படுகிறீர்கள்? காட்டுப் பூக்கள் பூப்பதைக் கவனியுங்கள் அவை உழைப்பதும் இல்லை, நூல் நூற்பதும் இல்லை. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன், சகல மேன்மையும் பெற்றிருந்த சாலமோன்கூட இந்தப் பூக்களைப்போல் உடுத்தியதில்லை."



இன்றைக்கு இருந்து நாளைக்கு இல்லாமல்போகும் காட்டுப் புல்லுக்கே கடவுள் இப்படி உடுத்திவிடுகிறார் என்றால், உங்களுக்கான உடை எவ்வளவு நிச்சயம்! அதனால், எதைச் சாப்பிடுவோம்? எதைக் குடிப்போம்? எதை உடுத்துவோம்? என்று ஒருபோதும் கவலைப்படாமல் இருங்கள். இவற்றையெல்லாம் பெறுவதற்கு உலகத்தார்அலைந்து திரிகிறார்கள். ஆனால், இவையெல்லாம் உங்களுக்குத் தேவை என்று உங்கள் பரலோகத் தந்தை அறிந்திருக்கிறார் என்றார்.



# பேஸ்புக் பயங்கரம்
# ஆபாச அரக்கர்களிடம் பலியான 200 பெண்கள்

“உன்னை ப்ரெண்டுனு நம்பித்தான வந்தேன்... இப்பிடிப் பண்றீயே... ப்ளீஸ் விட்டிடு!’ என்று கதறுகிறார் அந்த இளம்பெண். அதைத் துளியும் பொருட்படுத்தாமல், அந்தப் பெண்ணின் மேலாடையை உரித்து, தனக்குப் பின்னால் இருப்பவனிடம் கையைக்காட்டி வீடியோ எடுக்கச் சொல்கிறான், அந்தக் கொடூரன். திடீரென நுழையும் கும்பலைப் பார்த்து, அதிர்ச்சியிலும் அவமானத்திலும் துடிதுடித்துப் போகிறார், அந்த இளம்பெண். கைகளை மார்பின் குறுக்கே மறைத்துக்கொண்டு, அனைவரின் காலில் விழுந்தும் மன்றாடுகிறார் அந்தப் பெண்.. இறுதியில் எல்லோரும் சேர்ந்து அவளைச் சிதைக்கிறார்கள். இப்படி ஒன்று இரண்டு அல்ல... எக்கச்சக்கமான வீடியோக்கள். ஒவ்வொரு பெண்ணின் கதறலையும், கண்ணீரையும் பார்க்கும்போது, இதயம் நொறுங்குகிறது... ‘இந்த மிருகங்களை என்ன செய்யலாம்?’ என்று மனம் கொதிக்கிறது.

இவ்வாறு செய்த அந்தக் கொடூரக் கும்பலைச் சேர்ந்த திருநாவுக்கரசு(26) சபரி ராஜன் என்கிற ரிஷ்வந்த்(25), சதீஷ்(28), வசந்தகுமார்(24) ஆகியோரை பொலிஸ் கைது செய்திருக்கிறது. பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி, புகார் கொடுத்த பெண்ணின் அண்ணனைத் தாக்கியதாக மேலும் நான்கு பேரைக் கைது செய்திருக்கிறது பொலிஸ். இவர்கள் நான்கு பேரும் பிணையில் வந்துவிட்டார்கள். இந்த நிலையில்தான், இந்தக் கும்பலில் இருப்பவர்களின் எண்ணிக்கை நான்கு பேர் மட்டுமல்ல... சுமார் இருபது பேர்வரை கொண்ட பெரும் கும்பல் ஒன்று திட்டமிட்டு, கடந்த ஏழு ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான பெண்களைச் சீரழித்திருப்பதும், இதன் பின்னணியில் கோடிக்கணக்கில் பணம் விளையாடியிருப்பதும், பின்னணியில் அரசியல்வாதிகள் இருப்பதும் தெரியவந்துள்ளது. இதுதொடர்பான தீவிர விசாரணையில் இறங்கினோம். கிடைத்த தகவல்கள் அத்தனையும் அதிர்ச்சி ரகம்!

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து இதுவரை 50-க்கும் அதிகமான வீடியோக்களைக் கைப்பற்றியிருக்கிறது பொலிஸ். ஆனால், இவ்வளவு நடந்தும், எதுவுமே நடக்காததுபோல் அமைதிகாக்கிறார்கள் கொங்கு மண்டல ஐ.பி.எஸ். அதிகாரிகள். இதுபோன்று, பாதிக்கப்பட்ட பெண்களின் விவரங்களை வெளியிடக்கூடாது என்பது உச்ச நீதிமன்ற உத்தரவு. ஆனால், கோவை எஸ்.பி அலுவலகம் வெளியிட்ட பத்திரிகை செய்திக்குறிப்பில் புகார் கொடுத்த பெண்ணின் பெயர், அவரது ஊர் விவரங்களை வெளியிட்டிருக்கின்றனர். இதுவே புகார் தருபவர்களை மறைமுகமாக மிரட்டுவதுபோல இருக்கிறது. இதுபோன்ற ஒரு கொடூரம் டெல்லி, சென்னை போன்ற பெருநகரங்களில் நடந்திருந்தால், விவகாரம் விஸ்வரூபம் எடுத்திருக்கும். ஒரு சிறுநகரத்தில் இது நடந்துள்ளதால், எதிர்விளைவுகள் பெரிதாக இல்லை. அதேசமயம், இந்த விவகாரத்தைப் பெரிய அளவில் வெடிக்கவிடா மல் தடுப்பதில், பொலிஸார் ஆளும் கட்சிப் பிரமுகர்கள் சிலரும் கவனமாகச் செயல்படுகிறார்கள் என்பது உள்ளூர் மக்களின் குற்றச்சாட்டாக இருக்கிறது.

**புகார் தரப்பு மீது தாக்குதல்!**

இந்த விவகாரத்தில் புகார் கொடுத்த பெண்ணின் அண்ணனை, சிலர் தாக்கியுள்ளனர். இதுதொடர்பாக, பெண்ணின் அண்ணனை மிரட்டியதாக செந்தில் (33), பாபு (26), வசந்தகுமார் (20), நாகராஜ் (26) ஆகிய நான்கு பேரைக் கைது செய்தது பொலிஸ். இதில் நாகராஜ் பொள்ளாச்சி 34-வது வட்ட ஜெயலலிதா பேரவைச் செயலாளர். தாக்குதல் புகாரில் கைதான நான்கு பேருமே மூன்று நாள்களில் பிணையில் வெளிவந்துவிட்டனர். இதனால், பாதிக்கப்பட்ட மற்றவர்கள் எந்தத் தைரியத்தில் புகார் கொடுக்க முன்வருவார்கள் என்கிற கேள்வியும் எழுகிறது. இந்த வழக்கை சி.பி. சி.ஐ.டி. விசாரிக்க வேண்டும் என்று தி.மு.க உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தியுள்ளன. அ.தி.மு.க. மற்றும் பி.ஜே.பி. தவிர, மற்ற கட்சிகள் எல்லாம் இந்த விஷயத்தில் ஒருமித்த குரல் கொடுத்தாலும், பொலிஸாரின் நடவடிக்கை கண்துடைப்பாகவே தெரிகிறது.

விஷயம் வெளியே வந்து, ஒரு வாரத்துக்கு மேலாகியும், எஸ்.பி. நேரில் சென்று விசாரணை நடத்தவில்லை. கைதுசெய்யப்பட்ட குற்றம்சாட்டப்படும் நான்கு முக்கிய நபர்களான சதீஷ், சபரிராஜன், வசந்த குமார், திருநாவுக்கரசு ஆகியோரை மறியலுக்கு எடுத்து பொலிஸார் விசாரிக்கவில்லை. தலைமறைவாக இருந்து, பின்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட திருநாவுக்கரசு, பொலிஸிடம் சிக்குவதற்கு முன்பு வெளியிட்ட வீடியோ வாக்குமூலத்தில், ‘இந்த விவகாரத்தில் பலருக்கும் தொடர்பு இருக்கிறது. அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். சி.பி.சி.ஐ.டி. விசாரித்தால் பல உண்மைகள் வெளிவரும்’ என்றும் சொல்லியிருந்தார். குற்றம்சாட்டப் பட்ட ஒருவரே சி.பி.சி.ஐ.டி. விசாரணை கோருகிறார் என்றால், இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் யார் என்ற கேள்வி எழுகிறது.

**20 பேர் நெட்வொர்**

இந்த விவகாரம் 
பொலிஸார் மற்றும் 
அரசியல் வட்டாரங்
பேசினோம். “இந்தக்
இருபது இளைஞர்க
உள்ளனர். பொள்ளா
தொழில், ‘பார்’ குத்த
கட்சிப் பின்புலத்துட
சில தொழில்களைச்
பெண்களை வளைத்
சம்பாதிப்பதையே மு
தொழிலாக வைத்திரு
எல்லாமே பக்கா நெ
விலை உயர்ந்த கார்,
உயர்ரக ஆடைகளில்
வலம்வருவார்கள். சி
போல இருக்கும் அ
துல்லியமாகத் திட்ட
நெகிழ்வாகவும் உருக்
பேசி, பெண்களைக்
வீழ்த்துவார்கள்.

சமூக ஊடகங்களி
இயங்கும் இளம் பெ
இவர்களின் இலக்கு.
வழிக்குக் கொண்டுவ
இவர்கள் கையாண்டு
பேஸ்புக்கில் பெண்க
‘போலிக் கணக்கு’ த
முதலில் நட்பாவார்க
விஷயங்களை இன்ப
பகிர்ந்துகொள்வார்க
உடல் இச்சை தொட
கேட்பதுபோல சில
வீசுவார்கள். எதிர்மு
பெண்களோ, ‘கேட்ட
போன்
பெண்
சில வ
விட்டு
அதை
மெது
உறவு
எடுப்ப
அதில்
பெண்
விடுப்
பெண்
மெசே
போது
உண்
காண்பித்து, அந்தத்
பதிவை வெளியிட்டு
சொல்லியே பல பெ
கொண்டு வந்துள்ள

**“அம்மா, இதோ உ**

இன்னொரு பக்கப்
நண்பர்கள் மூலமாக
பெண்கள் என்று எல்
நட்பு அல்லது காதல்
கைபேசி எண்களை
பேசுவார்கள், பழகுவ
தொடங்கும் பெண்
ஏற்படுத்துவதற்காக,
வீடுகளுக்கு அழைத்
அங்கு வேலைக்கு இ
வயதான பெண்களை
‘செட்டப்’ அம்மாவா
இதுதான் உன் மரும
அறிமுகப்படுத்துவா
அந்தப் பெண்கள் இ
இடங்களுக்குச் செல்
அல்லது காதலன் எ
ஒருவன்தான் அழைத்
பெரும்பாலும் வார 
நாள்களில், ஆள் அர
தென்னந்தோப்புகளி
தோட்டத்து பங்களா
ரிசார்ட்களுக்கு கார்

ர்க்!
தொடர்பாக,
பொள்ளாச்சி
ங்களில்
க் கும்பலில்,
கள்வரை
ாச்சியில் கேபிள்
தகை என ஆளும்
டன் இவர்கள்
செய்தாலும்,
ந்து, பணம்
முழு நேரத்
ருந்தார்கள்.
நட்வொர்க்.
, பைக் மற்றும்
ல் அவர்கள்
சினிமா நாயகர்கள்
வர்கள்,
டம் தீட்டி,
க்கமாகவும்
காதல் வலையில்

ரில் தீவிரமாக
பண்கள்தான்
. பெண்களை
வர, பல உத்திகளை
டுள்ளனர்.
கள் பெயரில்
யாரித்து,
கள். தனிப்பட்ட
பாக்ஸில்
கள். தொடர்ந்து,
டர்பாக அறிவுரை
கேள்விகளை
னையில் 'இருக்கும்
பதும் நம்மைப்
ன்ற இளம்
ன்தானே' என்று
வார்த்தைகளை
டுவிடுவார்கள்.
தத் வைத்தே
துவாக லெஸ்பியன்
பு பற்றிப் பேச்சு
பார்கள்.
ல் மயங்கும்
ண்களுக்கு அழைப்பு
ப்பார்கள். அந்தப்
ன் ஒப்புக்கொண்டு
சேஜ் தட்டிவிட்டால்
தும்... தங்களது
மையான முகத்தைக்
தகவலை 'பேஸ்புக்'
டுவிடுவேன் என்று
பண்களை வழிக்குக்
னர்.

**உன் மருமகள்!"**

ம் உறவினர்,
க அறிமுகமாகும்
ல்லோரிடமும்
ல் என்ற பெயரில்
வாங்கிப்
வார்கள். காதலிக்கத்
ணிடம் நம்பிக்கை
, பண்ணை
த்துச்சென்று,
இருக்கும்
ளயே
ாக்கி, 'அம்மா,
மகள்' என்று
ார்கள். இதை நம்பி,
வர்கள் கூப்பிடும்
ல்வார்கள். நண்பன்
ன்ற பெயரில்
த்துச்செல்வான்.
வேலை
ரவமின்றி இருக்கும்
ரில் உள்ள
ாக்கள் அல்லது
களில் அழைத்துச்

செல்வார்கள். அறைக்குள் போனதும், நண்பனே மிருகமாக மாறி, அந்தப் பெண்ணைச் சீரழிக்கத் தொடங்குவான்.

அதை வீடியோ எடுப்பதற்கு, ஏற்கெனவே அங்கு ஒரு கும்பல் ஒளிந்திருக்கும். பின்பு எல்லோரும் சேர்ந்து, அந்தப் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்து, அதையும் வீடியோ எடுத்துவிடுவார்கள். பணக்காரப் பெண்ணாக இருந்தால், அதைக் காண்பித்துப் பணம் பறிப்பார்கள். ஏழைப் பெண்ணாக இருந்தால், வீடியோவை வெளியிட்டுவிடுவதாக மிரட்டியே பாலியல் பலாத்காரம் செய்வதுடன், வசதி படைத்தவர்கள், அரசியல்வாதிகள் என்று பலருக்கும் அனுப்பி வைத்து, தங்களுக்கு வேண்டிய காரியங்களைச் சாதித்துக்கொள்வார்கள். கடந்த ஏழாண்டுகளில் பள்ளி மாணவிகள் தொடங்கி, திருமணமான பெண்கள்வரை சிக்கியுள்ளனர்" என்று சொன்னவர்கள், இதில் பாதிக்கப்பட்ட சிலர் பற்றியும் நம்மிடம் சொன்னார்கள்.

"பிரபலப் பள்ளியின் பெண் தாளாளர், ஒரு கல்லூரிப் பேராசிரியர், இரண்டு பிளஸ் 2 மாணவிகள் என இதுவரை குறைந்தது 200 பெண்கள் இவர்களின் வலையில் சிக்கியிருப்பர். வசதி படைத்த இரு டொக்டர்களின் மனைவியரும் இவர்களிடம் சிக்கியுள்ளனர். ஒருவரிடமிருந்து மட்டும் ஒன்றரை கோடி ரூபாய் வரையும், மற்றவரிடம் 50 லட்ச ரூபாய் வரையும் பறித்துள்ளனர். இந்த இளைஞர்களில் ஒருவரின் உறவினர் நர்ஸ். அவருக்கு இந்தக் கும்பலின் அத்தனை நடவடிக்கைகளும் தெரியும். சற்று மனநலம் பாதிக்கப்பட்ட ஒரு பெண் அழகாக இருப்பார். அவரை அழைத்துச் சென்று, மது குடிக்க வைத்து, நாசப்படுத்தியுள்ளனர். அந்தப் பெண் கர்ப்பமானதும் அதைக் கலைப்பதற்கு இந்த நர்ஸ் உதவியுள்ளார். பொள்ளாச்சி மற்றும் சுற்றுவட்டாரத்தில், ஒரே ஆண்டில் ஏழு இளம் பெண்கள், தற்கொலை செய்துள்ளனர். இவர்களின் வழக்குகள் அனைத்தும் காதல் தோல்வி, வயிற்று வலி என்று முடிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் கும்பலிடம் சிக்கித்தான் தற்கொலை செய்திருப்பார்களோ என்ற சந்தேகம் இப்போது எழுகிறது.

**ஆளும் கட்சி ஆதரவு!**

ஊர்ப்பெயரை அடைமொழியாகக் கொண்ட ஆளுங்கட்சிப் பிரமுகர் ஒருவரின் மகன்கள் இருவருக்கும் இதில் தொடர்பு இருப்பதாக சந்தேகம் உள்ளது. அதில் இளைய மகன், வால்பாறையில் இதேபோன்று ஒரு பெண்ணை அழைத்துச்சென்று பாலியல் துன்புறுத்தல் செய்தபோது, அந்தப் பெண் சத்தம் போட்டதில் மக்கள் கூடிவிட்டனர். அவன் தப்பிவிட்டான். பெண்கள் விஷயத்தில் படு வீக்கான நகராட்சியின் முக்கிய பிரமுகருக்கும் இதில் தொடர்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால்தான், இந்த வழக்கை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்ற வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன. இந்தப் போராட்டத்துக்கு அ.தி.மு.க., பி.ஜே.பி இரு கட்சிகள் மட்டும் ஆதரவு தரவில்லை. இதுவே சந்தேகத்தை வலுப்படுத்துகிறது. தேர்தல் நேரத்தில் இந்த விவகாரம் கொங்கு மண்டலத்தில் ஆளும் கட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றே இதை அமுக்கப்பார்க்கிறது காவல்துறை" என்றார்கள் கொந்தளிப்புடன்!

அந்த இளைஞர்களிடம் இருந்த அத்தனை வீடியோக்களையும் பொலிஸார் வாங்கிவிட்டதாகவும், அதை வைத்து சம்பந்தப்பட்டவர் களை மிரட்டிப் பணம் பறிப்பதற்கான வேலை தொடங்கிவிட்டதாகவும் எதிர்க்கட்சியினர் சந்தேகம் கிளப்பியுள்ளனர்.

இதுதொடர்பாக கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் தென்றல் செல்வராஜ், "இந்தச் செய்தி வெளியானதிலிருந்து பொள்ளாச்சி மக்கள் கடும் வேதனையில் உள்ளனர். கைது செய்யப்படும் முன்பு திருநாவுக்கரசு வெளியிட்ட ஆடியோவில், 'இதில் அரசியல் தொடர்புகள் உள்ளன. என் உயிரே போனாலும் அதை வெளியில் சொல்வேன். பொலிஸ், ஊடகங்கள், எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் எல்லோரும் எனக்கு ஆதரவு தரவேண்டும்' என்று கூறினார். எனவே, இதில் ஆளுங்கட்சியினரின் தொடர்புகள் இருப்பதாகப் பொள்ளாச்சி முழுக்கப் பேச்சு ஓடுகிறது. பயங்கரமான கதைகளை எல்லாம் சொல்கிறார்கள். ஆனால், கைது செய்யப்பட்ட திருநாவுக்கரசுவிடம் அந்த ஓடியோ தொடர்பாக எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. உண்மையை மூடிமறைக்கப் பார்க்கிறது பொலிஸ். இதில் தொடர்புடையவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

இதுதொடர்பாக கோவை எஸ்.பி பாண்டியராஜனிடம் பேசினோம். "இந்த வழக்கை போலீஸ் சரியாக கையாண்டுவருகிறது. பாதிக்கப்பட்ட பெண் புகார் கொடுத்ததும் குற்றவாளிகள் மூன்று பேரை கைது செய்துவிட்டோம். தலைமறைவாக இருந்த திருநாவுக்கரசுவும் கைது செய்யப்பட்டுவிட்டார். தவிர, புகார் கொடுத்த பெண்ணின் அண்ணனை மிரட்டிய திருநாவுக்கரசுவின் நண்பர்கள் நான்கு பேரையும் கைது செய்துள்ளோம். இது சென்சிட்டிவான விஷயம் என்பதால் வீடியோக்களின் எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களைப் பகிர்ந்துகொள்வது சரியாக இருக்காது. இந்தக் கும்பலால் பாதிக்கப்பட்ட பெண்கள் தைரியமாக வந்து புகார் கொடுக்க வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற குற்றங்களை தடுக்க முடியும். மற்றபடி, இதில் அரசியல் தலையீடுகளோ அழுத்தங்களோ கிடையாது" என்றார்.

இதற்கிடையே ஆளுங் கட்சியினரைக் காப்பாற்றுவதற்காக, குற்றம் சாட்டப்பட்டு சிறையில் இருக்கும் நான்கு பேரையும் குண்டர் சட்டத்தின் கீழ் கைதுசெய்ய பொலிஸ் முடிவு செய்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. சமூகத்தில் பெண்களுக்கான பாதுகாப்பை உறுதிசெய்வது காவல்துறையின் கடமை. இதில் காவல்துறையின் கைகளைக் கட்டிப்போடாமல் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட அனுமதிப்பதிலேயே தமிழக அரசின் மாண்பு அடங்கியிருக்கிறது!

நன்றி: ஜீனியர் விகடன்

## அல்வாயூர்...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

கலாநிதி.அ. புஸ்பநாதன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ப்பிரிவின் முன்னாள் பணிப்பாளர சி. வன்னியகுலம் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரைகளை வழங்குகிறார்கள்.

நூலின் அறிமுகவுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியற்துறைத் தலைவரும் எழுத்தாளருமான இ. இராஜேஸ்கண்ணன் வழங்கவுள் ளார். நூல் வெளியீட்டுரையை யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கி.விசாகரூபனும் மதிப்பீட்டுரையை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் வழங்கவுள்ளனர்.


இப்பெருந்தொகுதி பற்றி பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா குறிப்பிடும்போது, "கவிஞரின் பன்முக ஆளுமையைப் பதிவுசெய்யு இப்பெருந்தொகுப்புக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உண்டு. கவிஞரைப் பற்றி ஆய்வு செய்வோர் அதிகம் சிரமப்படத் தேவையில்லை. கவிஞர் மு.செல்லையாவின் ஆற்றலை, திறனை, ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் அவர் வீற்றிருந்த சிம்மாசனத்தைக் கண்டவர்கள் மகிழவும் காணாதவர்கள் இனிக்கண்டு வியக்கவும் இப்பெருந்தொகுப்பு வழிவகுக்கும். எனக் குறிப்பிடுகிறார்.

'கவிஞரின் தொலைநோக்கும் அவற்றை அடைவதற்குரிய காலத்தோடு ஒட்டிய செயற்பாடுகளும் முழுத்தமிழ்ச் சமுதாயமே போற்றுமளவுக்கு அமைந்திருந்தமை அவரது வெற்றியாகும். எமது சமுதாயங்கள வளர்ச்சிப் பாதைகள் ஒவ்வொன்றி கவிஞர் அவர்களின் பாதச்சுவடுகள் பதிந்துள்ளன. அவருடைய வகிபாகங்கள் ஒவ்வொன்றினதும் முக்கியத்துவம் காலச்சூழலோடு ஒட்டிப்பார்க்கும் போது தெளிவாக புலப்படும்." என்று பேராசிரியர் மா.கருணாநிதி குறிப்பிடுகிறார்.

"அல்வாயூர் மு.செல்லையாவின் பிரதிகள் சைவமும் காந்தியமும் இணையும் கருத்துநிலைப் புள்ளியிலிருந்து மேற்கிளம்புவன. இவை காலனிய மற்றும் பின்காலனி கால ஈழத்துத் தமிழ்விளிம்பு நிலைச்சமூகமொன்றின் மொழிவழி வெளிப்பாடுகளாய் அமைவன. ஈழத்தின் பிரபந்தமரபு, கவிதைமரபு, கதைமரபு, ஊடகமரபு, வியாசமரபு, பாடநூலாக்கமரபு ஆகிய அறுவகை மரபிலும் செல்லையாவின் தடம் முக்கியமானதும் விரிவானஆய்வுக்குரியதுமாகும்." என செல்லத்துரை சுதர்சன் குறிப்பிடுகிறார்.

எனவே எம்மிடையே வாழ்ந்து தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் பாடுபட்ட மு.செல்லையா போன்றோருடைய இலக்கியப் படைப்புக்களின் வெளிவருகைக்கு தமிழ் இலக்கிய உலகு ஆதரவு கொடுத்து இளையதலைமுறைகளி பல்துறைஆற்றலுக்கு வழிசமைக்க வேண்டியது எம் ஒவ்வொருவரினத கடமை.

# வேலை போரடிக்கிறதா...? இந்த வழிகளை பின்பற்றுங்கள்



செய்யும் வேலைகளில் விருப்பம் இல்லாமல், போரடிக்கிறது எனப் புலம்புபவர்கள்தான் நம்மில் அதிகம். இதற்குக் காரணம் வேலையின் மீது நாட்டமின்மைதான். எவர் ஒருவர், செய்யும் வேலையைக் காதலித்துச் செய்கிறார்களோ, அவர்களே அலுவலகத்தின் அடுத்தடுத்த கட்டத்துக்கு நகர்த்தப்படுகிறார்கள். அதனால்...

**1. இடைவேளை எடுங்கள்**

வேலை நேரத்தில் வேலைகளுக்கு இடையில் ஐந்து நிமிட இடை வேளை கிடைத்தாலும், உங்கள் வேலை யிடத்திவிட்டு அகலுங்கள். மடிக்கணனி, அலைபேசி, மின்னஞ்சல் இவற்றிலிருந்து விடுபடுங்கள். அதேபோல உணவு நேரத்தைத் தவறவிடாதீர்கள். ஏனெனில், அது உணவுக்காக மட்டுமல்ல, நல்ல காற்று நம்மைத் தழுவவும், மனதுக்கு ஓய்வுக்கும்தான். குறைந்தது ஒருநாளில் மூன்றில் ஒரு பங்கு நேரத்தை அலுவலகத்தில்தான் செலவிடுகிறீர்கள். அப்படியிருக்க, உங்களுக்குக் கிடைக்கும் நேரத்திலும் வேலை நினைப்பை மண்டைக்குள் போட்டு குழப்பாதீர்கள்.

**2. புதியவற்றைப் படியுங்கள்**

வேலை மகிழ்ச்சியாக இல்லையென்றால், உங்களுக்கு அதில் போரடிப்பதும் இயல்புதான். வேலையில் அதிகபட்ச ஈடுபாட்டுடன் பணியாற்றும்போதுதான், பெரும்பாலான மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர் என்கிறது ஆய்வு. தற்போதைய வேலையில் நீங்கள் கற்றுக்கொள்ள எதுவுமில்லை எனத் தோன்றினால், வேலையை மேலும் சுவாரசியமாக மாற்றவும், நிறுவனத்துக்குப் பயனுள்ள வகையில் இருக்கவும், புதிய திறன்கள் அல்லது புதிய அறிவை வளர்த்துக்கொள்ளவும் முயலுங்கள். இது பணிப் பாதுகாப்பையும் திருப்தியையும் தரும்.

**3. வெறுப்பைப் பரப்புவோரிடம் தள்ளியிருங்கள்**

எந்த நிறுவனமாக இருந்தாலும் எல்லாவற்றைப் பற்றியும் குறைபட்டுக் கொள்வதில் சுகம் காணும் மக்கள் இருக்கவே செய்வார்கள். மற்றவர்கள் மீது குறை சொல்லிச் சொல்லியே உங்களை நம்பிக்கை இழக்கச் செய்பவர்கள் இருப்பார்கள். இதனால் மற்றவர்களிடம் இருக்கும் நேர்மறையான விடயங்கள் உங்கள் கண்களுக்குத் தெரியாது. இது சக பணியாளர்களைப் பற்றி மேலும் மோசமாக உணரச் செய்யும். வேலை மீது இவ்வாறு நீங்கள் உணர்ச்சிவசப்படாதவாறு காத்துக்கொள்ள, நேர்மறையாக சமநிலையுடன் பேசும் நபர்களுடன் நேரத்தை செலவிடுங்கள்.

**4. திறமையை வெளிப்படுத்துங்கள்**

உங்கள் வேலையைச் சிறப்பாகச் செய்யப் போதுமான ஆர்வத்தை நீங்கள் காட்டவில்லையெனில், அது வெறும் வேலையாகத்தான் இருக்கும். ஒரு வேலையை நன்றாகச் செய்து முடித்த பிறகு கிடைக்கும் திருப்தி அலாதியானது. வேலையை அனுபவித்துச் செய்யாமல், கடமையே என ஈடுபாடின்றி செய்தால், அந்தத் திருப்தியை என்றைக்குமே உங்களால் உணர முடியாது. ஆகவே, உயர்ந்த அளவுகோல்களை நிர்ணயியுங்கள். முடிந்த அளவுக்கு வேலையைச் சிறப்பாகவும் தரமாகவும் செய்யுங்கள்.

**5. தனி வாழ்க்கையைக் கவனியுங்கள்**

வேலையில் போரடிப்பதாக உணரும் பலருக்கும், தனிப்பட்ட வாழ்வில் அதிருப்தி இருப்பதன் அறிகுறியாகவும் இருக்கலாம் என்கின்றனர் உளவியலாளர்கள். உங்கள் மனதை உற்சாகம்கொள்ளவைக்கும் இன்ஸ்பிரேஷனை வேலைக்கு வெளியேயிருந்து பெறுவது, வேலையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். உணர்வுரீதியான பிரச்சினைகளுக்கு ஆலோசனை பெறும்போது, அது உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைச் சரிப்படுத்துவதால், அதன் விளைவாக வேலையிலும் உங்களால் ஈடுபாட்டுடனும் மகிழ்ச்சியுடனும் இயங்க முடியும்.

# வெற்றி மொழி: மரியா மன்ரெசோரி



1870 ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டு வரை வாழ்ந்த மரியா மன்ரெசோரி இத்தாலிய கல்வியாளர் மற்றும் மருத்துவர் ஆவார். இத்தாலியில் மருத்துவ பட்டம் பெற்ற முதல் பெண் என்ற சாதனையைப் படைத்தவர். சிறந்த மனோதத்துவ மருத்துவராகவும், சிறந்த கல்வியாளராகவும் திகழ்ந்தவர்.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் உள்ள பல பாடசாலைகளில் இவர் வழிகாட்டிய கல்வி முறைதான் இப்போது பின்பற்றப்படுகிறது.

கூ சிறுவர் கல்வி என்பது சமுதாயத்தின் மேம்பாட்டுக்கு முக்கியமானது.

- ஒரு குழந்தை நிச்சயம் பெறவேண்டிய முதல் யோசனை என்னவென்றால், நன்மைக்கும் தீமைக்குமான வேறுபாடே.
- குழந்தையின் கவனத்தைக் கட்டுப்படுத்தும் பிரச்சினையை நீங்கள் தீர்க்கும்போது, அதன் கல்வியின் முழுப் பிரச்சினையையும் நீங்கள் தீர்த்து விடுகிறீர்கள்.
- நீடித்த சமாதானத்தை நிலைநாட்டுவதே கல்வியின் பணி.
- எல்லாவற்றுக்கும் மேலான அதிக ஆற்றல் வாய்ந்தது அன்பு.
- தேவையற்ற உதவி இயற்கை சக்திகளின் வளர்ச்சிக்கு ஒரு உண்மையான தடை ஆகும்.
- கவனம் செலுத்தும் குழந்தையே மிகவும் மகிழ்ச்சியான குழந்தையாக உள்ளது.
- குழந்தைகள் அவர்கள் விரும்பும் விடயங்களைப் போலவே இருக்கிறார்கள்.
- நிகழ்காலத்தை பாதுகாப்பதன் மூலமாக நாம் எதிர்காலத்திற்கு சேவை செய்கிறோம்.

# பணம் சம்பாதிப்போமா...!

## செல்வம் சேர்க்கும் இரகசியம்



ஒருவருடைய வாழ்க்கையில் முக்கிய நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்கிற மாதிரியான அசையும் சொத்துகளை ஒருவர் தயாராக வைத்திருக்க வேண்டும். அசையா சொத்துகள் இருப்பின், நிதித் தேவை ஏற்படுகிற கொஞ்ச காலத்துக்குமுன், அதாவது 1 - 2 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவற்றை அசையும் சொத்தாக மாற்றிக்கொள்ள வேண்டும்.

**அசையா சொத்துகள்**

அசையா சொத்துகளை உடனடியாகப் பணமாக மாற்ற முடியாது. சொத்து, நிலம், வேளாண் சொத்துகள், கலைப் பொருள்கள், வியாபாரம் (கடை, விற்பனை உரிமை அல்லது காட்சியறை) போன்றவை இதில் அடங்கும். இந்தச் சொத்துக்களை ஒருவரது சுறுசுறுப்பான வாழ்க்கைக் கட்டத்தில்தான் பயன்படுத்த முடியும். ஒருவர் ஓய்வு பெற்றுவிட்டால், வயோதிபம் தொடர்பான பிணிகள் காரணமாகவோ அல்லது பிள்ளைகளுடன் வெளிநாட்டில் வசிக்க நேர்ந்தாலோ அசையா சொத்துகளை நிர்வகிப்பதே பெரும் சுமையாக மாறிவிடும். எப்போதும் மாறிக் கொண்டிருக்கிற விதிமுறைகள் ரூ டிஜிற்றலாக்க முயற்சிகளுக்கேற்ப மாற்றுவதற்காகப் பல்வேறு அரச அலுவலகங்களைத் தேடி ஓடுவது பெரும் சிரமமாகிவிடும்.

ஓய்வு பெற்ற வங்கி ஊழியர் சங்கர். அவரது மகன் வெளிநாட்டில் வசிக்கிறார். அவருக்குச் சொந்தமான ஒரு வீட்டை வாடகைக்கு விட்டு அதனை நிர்வகிப்பதுடன், மகனுக்குச் சொந்தமான வீட்டையும் வாடகைக்கு விட்டு நிர்வகித்து வருகிறார். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையும் வாடகைதாரர்கள் மாறுவதால், அந்த வீடுகளில் இன்னொரு வாடகைதாரரைக் குடியமர்த்த தர்கர் ஒருவரை தேட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தச் சொத்துகளை நிர்வகிக்க அவர் எங்கும் செல்லாமல், இங்கேயே இருக்க வேண்டியிருக்கும்.

பெரும்பாலான முதியவர்கள் அவர்களது சொத்துகளை விற்க முடிவு செய்யப்படும்போது, கறுப்பு பணத்தைக் கையாள்வதில் உள்ள சிரமங்களைப் பற்றி அவர்களிடம் எதுவும் சொல்லாமலேயே, உண்மையான விலைக்கேற்ப அல்லாமல், மிகக் குறைந்த விலையைக் குறிப்பிட்டே பத்திரங்களைத் தயார் செய்து, அந்தப் பரிவர்த்தனைகளை ஏற்குமாறு நிர்பந்திக்கப்பட்டு ஏமாற்றப்படுகிறார்கள்.

பிள்ளைகள் வெளிநாட்டில் வசிப்பதால், பெற்றோர் இருவரும் காலமாகிவிடுவது போன்ற சந்தர்ப்பங்களில், சொத்துக்களை மாற்றுவதும் விற்பதும் மிகவும் சிக்கலாகிவிடும். அவர்களுக்கு இது நேர விரயம் மட்டுமல்லாது, சட்ட நடைமுறைகள் குறித்து சரியான வழிகாட்டுதல் இல்லாதது, வரி செலுத்துவது, வெளிநாட்டிலிருந்து நாடு திரும்புவது, விற்ற பணத்தை டொலராகத் திரும்ப எடுத்துச்செல்வது குறித்த வங்கி வழி முறைகள் சரி யாகத் தெரியாதது போன்றவற்றினால் அசையா சொத்துகளை விற்பது என்பது மிகப் பெரிய சவாலாக மாறிவிடும்.

(சம்பாதிப்போம்)

தொகுப்பு: ஏ.ஜே.ஞானேந்திரன்

# விண்வெளியில் பெயர்பொறிப்பாரா புதியவர்?

சோவியத் ரஷ்யாவும் அமெரிக்காவும் நானா நீயா என்று போட்டிபோட்டுக்கொண்டு, விண்கலங்களை அனுப்பிய ஒரு பொற்காலம் ஓடி விட்டது. லைக்கா என்ற நாயை அனுப்பியது தொடக்கம், ஆர்ம்ஸ்ராங் சந்திரனில் காலடி எடுத்து வைத்தது என பல பங்களிப்புக்களை இரு நாடுகளுமே செய்து விட்டன. இப்போது உடைந்த




சோவியத் ஒன்றியம் சோம்பிக் கிடந்தாலும், அமெரிக்காவும், ஏனைய சில நாடுகளும் விண்வெளியை அடைவதில் - அறிவதில் ஆர்வம் காட்டி வருகின்றன.

அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளின் பங்களிப்பின் பின்னர், இஸ்ரேல் விண்வெளிக்குள் தன் மூக்கை நுழைத்துள்ளது. அமெரிக்க விண்வெளி வீரர்கள், சந்திரனில் காலடி எடுத்து வைத்து 50 வருடங்களின் பின்னர், இஸ்ரேல் சந்திரனுக்கு தன் விண்கலத்தை அனுப்பியுள்ளது. அது “செல்பிகளை” எடுத்து பூமிக்கு அனுப்பியுள்ளது எனப் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

புளோரிடாவிலுள்ள கேப் பனாவெரல் என்ற தளத்திலிருந்து Genesis என்ற வேதகாமப் பெயரிடப்பட்ட, 585 கிலோ எடைகொண்ட விண்கலம் பெப்ரவரி 22 ஆம் நாள் அனுப்பப்பட்டது. இதன் கட்டுப்பாட்டு நிலையம் இஸ்ரேலின் யெகுட் என்ற இடத்தில் உள்ளது. ஏழு வாரங்கள் நீடிக்கும் இந்தப் பயணம் ஏப்ரல் 11 அன்று நிறைவுக்கு வரும். இன்றுவரை ரஷ்யா, அமெரிக்கா, சீனா என மூன்று நாடுகள் மாத்திரமே பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான 384,000 கி.மீற்றர் பயணத்தை வெற்றிகரமாக முடித்து, திரும்பி வந்துள்ளன.

சீனாவின் Chang'e-4 என்ற விண்கலம் இந்த ஆண்டு ஜனவரி 3 இல் முதற்தடவையாக சந்திரனில் தன் பெயரைப் பதித்தது. Chandrayaan-2 என்ற விண்கலத்தை இன்னும் சில மாதங்களில் இந்தியா அனுப்பத் திட்டமிடுகின்றது. ஜப்பான் 2020-2021இல் சந்திரனின் எரிமலை பிராந்தியங்களைப் படம் பிடிக்க விண்கலமொன்றை அனுப்பத் தயாராகி வருகின்றது.

ஆரோக்கியமான போட்டிகள் அவசியமும்தான்...!



# இளமை திமிறலும் பணப் பெருக்கமும்

வயதில் இளமை. வங்கியில் பெருமை இப்படியான வாழ்வு எல்லோருக்கும் அமைவ தில்லையே. இதுகாலவரை முகநூல் ஸ்தாபகரான மார்க் ஸூக்கர்பேகர் 23 வயதில் ஒரு பில்லியனராகி விட்டார் எனப் பேசினோம். இப்போது அவரை மண் கௌவவைக்க, ஒரு இளமைத் திமிறல் கொண்ட அழகி ஒருவர் வந்துவிட்டார்.

இவரின் பெயர் கைலி ஜென்னர். வயது 21 மாத்திரமே. “மொடலிங்”தான் இவரது தொழில். மூன்று வருடங்களுக்கும் குறைவான காலத்தில் 900 மில்லியன் டொலர்கள் தொகையை இவர் சம்பாதித்து விட்டாராம். பெரு விற்பனையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அழகு சாதனைப் பொருட்கள் விற்பனை நிறுவனமான “கைலி கொஸ்மெடிக்ஸ்” ஒரு “சூடான” நிறுவனமாக இன்று மாறியிருக்கின்றது.

இவரது விற்பனைப் பொருட்களில் ஒன்றான “மேக்கப் பக்கெற்”, 29 டொலர் விலையில் விற்கப் பட்டு வருகின்றது. கடந்த 2 வருடங்களில் 630 மில்லியன் டொலருக்கு மேற்பட்ட பெறுமதியான மேக்கப் சாதனப் பக்கெற்றுக்கள் விற்பனையாகி இருக்கின்றதாம். ஷங்காய் நகரில்தான் பல முக்கிய வர்த்தக சம்பந்தமான சந்திப்புகள், ஒன்றுகூடல்கள் என்று இந்த நிறுவனத்தின் அனேகமான நடவடிக்கைகள் சீன நகரில்தான் இடம்பெற்று வருகின்றனவாம்.

உலகப் பணக்காரர்களை எடைபோடும் “போர்ப்ஸ்” சஞ்சிகையின் கணிப்பின்படி, நூற்றுக்கு நூறு வீதம் இந்த நிறுவனம் கைலிக்குச் சொந்தமானது என்றும் இதன் தற்போதைய சந்தைப் பெறுமதி 800 மில்லியன் டொலர்கள் என்றும் மதிப்பிட்டுள்ளர்கள். இதைவிட விளம்பரங்களில் நடிப்பது, நிறுவனத்தின் வருடாந்த ஊதியமான 60மில்லியன் டொலர்கள் என்று பணம் மேலதிகமாகச் சேர்கின்றது.

**பணத்திமிறலும், இளமைத்திமிறலும் கைகோர்க்கின்ற.**

# போதையில் தள்ளாடும் பொல்லாத கிளிகள்

பொப்பி செடிகளை அறிந்திருப்பீர்கள். பணப்பயிராக பல நாடுகளில் களவாக வளர்க்கப்படும் ஒபியம் என்ற போதை வஸ்து தயாரிப்பிற்கான ஒரு இனச் செடிதான் பொப்பி என்று அழைக்கப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் மலைப் பிராந்தி யங்களில்தான் இந்தப் பயிர்ச் செய்கை அதிகம். இந்தச் செடிகளை இந்தியாவின் மத்தியப் பிரதேசத்திலேயே விவசாயிகள் வளர்க்கிறார்கள். ஆனால் இரவில் இவர்கள் இங்கே காவலாளிகளைப் போட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள். இந்தப் பொப்பி விதை களைச் சாப்பிட்டு, இரவுப் பொழுதுகளில் போதையில் அட்டகாசம் செய்யும் கிளிக் கூட்டத்தை விரட்டுவதே இவர்களுக்கு போதும் போதும் என்றாகி விடுகிறதாம்.

இங்கே பரவலாகப் பெய்த மழை இந்தச் செடிகளுக்கு பெரும் பாதகத்தை ஏற்படுத்தி இருந்தாலும், இந்தக் கிளிகளின் தொல்லைதான் பெருந்தொல்லையாக இருப்பதாக முறையிடுகிறார்கள். ஒரு பொப்பி பூவிலிருந்து 20-25கிராம் ஒபியம் எடுக்கலாம். ஆனால் ஒருநாளில் 30-40 தடவைகள் ஒரு படையாக வந்திறங்கும் கிளிகள் விளைவிக்கும் நாசமோ பெரிது. விதைகளை இவை கொத்திச் சாப்பிடும்போது, இவற்றிற்கு போதை உணர்வு ஏற்படுகிறதாம். இதானல் அவை மீண்டும் மீண்டும் இங்கு வருகின்றன என்கிறார்கள்.

**அடிக்கடி வந்து, ஏழை விவசாயிகள் வயிற்றில் அடிக்கலாமா?**



# 10 சில்லு ராட்சசன்

நண்டு கொழுத்தால் வளையில் இராது என்பார்கள். பல பணக்காரர்களிடம் பணம் அதிகம் இருந்தாலும் அது தங்குவதில்லை. தமது செல்வச் செழிப்பை விளம்பரப்படுத்த, பல கோடிகள் கொடுத்து பலதையும் இவர்கள் வாங்குவதுண்டு. இந்த விடயத்தில் அரபுப் பணக்காரர்களுக்கு நிகர் அவர்களேதான்.

ஐக்கிய அரபுக் குடியரசின் அரச குடும்பத்தவரான ஷேக் ஹமாட் உலகின் மிகப் பெரிய இராணுவ கவச வாகனமொன்றைத் தயாரித்துள்ளார். “டபியன்”(Dhabiyan) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த வாகனத்திற்கு 10 சக்கரங்கள் என்பது தனிச் சிறப்பு. இந்த ரக வாகனங்களுள் உலகின் மிகப் பெரியது என்ற புகழும் இதற்கே போய்ச் சேருகின்றது.

இதன் இஞ்சின் 600 குதிரைவலு கொண்டது. 15.2 லீற்றர் டீசல் எரிபொருள் கலனைக் கொண்டது. எடை 24 தொன். 2.5 மீற்றர் அகலம், 8.2 மீற்றர் உயரம். விலைமதிப்புள்ள பல கார்களை முத்திரைகள் போல சேகரித்து வைத்திருக்கும் இந்தப் பணக்காரர் ஷேக் ஹமாட்தான் இந்த வாகனத்தை வடிவமைத்தவர் என்கிறார்கள்.

அண்மையில் ஷார்ஜா நகரில்இடம்பெற்ற கார் கண்காட்சியில் இந்த ராட்சசனும் காட்சிப் பொருளாகி பலரையும் பிரமிக்க வைத்தது. இதன் தயாரிப்பு செலவு இரகசியமாகவே உள்ளது. என்றாலும் இது பல மில்லியன்களை விழுங்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

**பணம் பாதாளம் மட்டும் பாயுமல்லவா...?**

■ ஜெ.முகில்

# குடிக்க நீரும் இல்லை பிடிக்க மீனும் இல்லை!

## ஒரு தீவையே புரட்டிப் போட்ட ண்ணெய்க் கசிவு

வழக்கமான வார இறுதி நாட்களில் கங்கவா விரிகுடா (Kangava Bay) கடற்கரை குழந்தைகளின் விளையாட்டுச் சத்தங்களாலும் கிளிஞ்சில் சிப்பிகளைச் சேகரிக்கும் உள்ளூர்க்காரர்களின் வியர்வைகளாலும் உயிர்ப்பாய் இருக்கும். பவளப்பாறைகளின் இடையே அலைந்து திரியும் மீன்களைப் பிடிப்பதற்காக கடலுக்குச் செல்பவர்களும் இதில் அடக்கம்.

ரெனெல் தீவின் (Rennell Island) கடற்கரையோர மக்களின் வாழ்வாதாரமும் வாழ்க்கையும் அந்த கடலைச் சார்ந்துதான் இருக்கிறது. ஆனால் கடந்த வார இறுதி நாட்கள் இவ்வளவு உயிர்ப்பு நிறைந்ததாக இல்லை. இன்னும் சொல்லப்போனால் அந்த கடற்கரையே இறந்துபோய் விட்டது. உலக வரைபடத்தில் பார்த்தால் தெற்கு பசிபிக் பெருங்கடலில் ஒரு புள்ளி போலத் தெரியும் ரெனெல் தீவு. அவுஸ்ரேலியாவுக்குக் கொஞ்சம் மேலே பப்புவா நியூகினியா தீவுக்கூட்டங்களுக்கு அருகில் அமைந்துள்ள சொலமன் தீவுகளின் (Solomon Islands) தெற்கு முனையில் அமைந்துள்ளது ரெனெல் தீவு. கங்கவா விரிகுடாவின் கரைப்பகுதி கடலில் இயல்பாய் காணப்படும் பேரேட் மீன்களை (parrot fish) இப்போது அவர்களால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

அந்த கடற்கரை மணல்களில் ஓடி விளையாடி அங்கிருக்கும் நீருற்றுகளில் தெளிவான தண்ணீரை அள்ளிக் குடிப்பதெல்லாம் கடந்த நான்கு வாரங்களாக நினைவில் மட்டுமே இருக்கிறது. இவை நெடுங்காலத்திற்கு நினைவாகவே இருக்கலாம் எனப் பல சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். இதற்கெல்லாம் காரணம் மனிதர்களின் அலட்சியத்தால் நிகழ்ந்த விபத்துதான்.

மிகச்சரியாக ஒன்றரை மாதத்திற்கு முன்பு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இரவு எம்வி சொலமன் ரேடர் (MV Solomon Trader) எனும் கப்பலில் ரெனெல் தீவுக்கு அருகில் உள்ள சுரங்கத்தில் அலுமினியத்தின் முக்கிய தாதுப்பொருளான பொக்ஸைட்டை ஏற்றிக்கொண்டிருந்தனர். இதே ஒன்றரை மாதத்திற்கு முன்பாக அவுஸ்ரேலியாவையும் நியூசிலாந்தையும் தாக்கிய ஓமா புயல் (cyclone Oma) பற்றிய எச்சரிக்கைகளை கப்பலின் ஆட்கள் சரியாக கவனிக்கவில்லை. பெப்ரவரி 5 ஆம் திகதி முன் இரவில் எம்வி சாலமன் டிரேடர் கப்பல் கரை தட்டி நின்றது. இத்தனைக்கும் கப்பலானது நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது.

கப்பலில் இருந்து எண்ணெய் கடலில் வெளியேற ஆரம்பித்தது. பவளப்பாறைகளுக்கு அருகில்தான் கப்பலானது கரை தட்டி நின்றுள்ளது. ரெனெல் தீவின் கிழக்குப் பகுதியானது பவளப்பாறைகள் நிறைந்த பகுதியாகும். உலகிலேயே மிகப்பெரிய பவளப்பாறைத் திட்டு அமைந்துள்ள பகுதி இதுதான். பவளப்பாறைகளின் காரணமாக இந்த கடற்பகுதியின் உயிர்வளம் அதிகம். இதனால் யுனெஸ்கோ அமைப்பு கிழக்கு ரெனெல் தீவுப் பகுதியை உலக பாரம்பாரிய இடமாக அங்கீகரித்துள்ளது. அதிலும் சட்டத்திற்கு புறம்பான மரம் வெட்டுவது மற்றும் அதிகப்படியான மீன் பிடித்தல் காரணமாக, கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இதனை ஆபத்து பட்டியலில் வைத்துள்ளது யுனெஸ்கோ. 30 மில்லியன் டொலர்கள் அளவிற்கு சரக்கு, எம்வி சொலமன் ரேடர் கப்பலில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதுவரை 80 தொன் அளவிற்கான எண்ணெய், கப்பலிலிருந்து கடலுக்குள் கசிந்துள்ளது. மேலும் 225 மீற்றர் நீளம் கொண்ட அந்த கப்பலில் 700 தொன்களுக்கும் அதிகமான எண்ணெய் இன்னும் மீதமிருப்பதாகவும் கூறுகின்றனர். அதுமட்டுமில்லாமல் அதிகமான அளவு பொக்ஸைட்டும் ஏற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இயற்கைச் சீற்றத்தின் காரணமாக மட்டும் இந்த விபத்து நிகழவில்லை என சாலமன் தீவின் அதிகாரிகள் கூறுகின்றனர்.

சொலமன் தீவுகளின் கடல்சார் பாதுகாப்பு நிறுவனத்தின் இயக்குநர் (Solomon Islands Maritime Safety administration Acting Director) ஜோனா மிற்றோ (Jonah Mitau) விபத்து பற்றி கூறுகையில், "அவர்கள் சர்வதேச பாதுகாப்பு மேலாண்மைக் குறியீடுகளை மீறியிருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கிறது. ஏனெனில் கப்பலில் வேலை பார்த்த ஆட்களின் எண்ணிக்கை போதுமான அளவைவிடக் குறைவாகவே இருந்தது. அதனால் அவர்கள் இரவு நேரத்தில் புயலின் அறிகுறிகளை கவனிக்கத் தவறிவிட்டனர். அவர்களின் அலட்சியத்தால்தான் இது நிகழ்ந்துள்ளது" என்றார்.



மேலும் முதற்கட்ட விசாரணை முடிவடைந்துள்ளது எனவும் மேலும் கப்பலின் தலைமை அதிகாரி, தலைமை பொறியாளர் மற்றும் இரண்டாவது பொறியியலாளர் ஆகியோரை அடுத்தகட்ட விசாரணைக்காக நாட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர். ஆனால் பெப்ரவரி 13 ஆம் திகதி விசாரணைக்காகக் கப்பலை விட்டு வெளியேறிய கப்பல் குழுவின் பெரும்பாலானோர் தற்போது நாட்டிலேயே இல்லையெனக் கூறுகின்றனர்.

மேலும் பெப்ரவரி 19 ஆம் திகதி வரை புயலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் எண்ணெய்க் கசிவை அகற்றும் பணிகளை முழுவீச்சில் செய்யமுடியவில்லை. அதன் பிறகும் கப்பல் நிர்வாகம் மெதுவாகச் செயற்பட்டதால் பொறுமையிழந்த சொலமன் தீவுகள் அரசு அவுஸ்ரேலியாவின் உதவியை நாடியுள்ளது. எம்வி சொலமன் ரேடர் கப்பலின் உரிமையாளர் ஹொங்கொங்கைச் சேர்ந்த சவுத் எக்ஸ்பிரஸ் லிமிற்றெட் (South Express Ltd) நிறுவனம். இந்த பிரச்சினையில் இருந்து தப்பிப்பதற்கும் காப்பீட்டுப் பணத்தைப் பெறுவதற்குமே செயற்படுகிறது என குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றன.

எண்ணெய்க்கசிவு இன்னும் கிழக்கு ரெனெல் தீவுப் பகுதியை எட்டவில்லை. ஆனால் அதற்குள்ளாகவே கங்கவா விரிகுடாவில் மீன்கள் செத்து மிதக்கின்றன. அலைகள் கறுப்பு நிறத்தில் கரையை மோதுகின்றன. கடல் முழுக்க எண்ணெய்ப் போர்வை போர்த்தியது போலக் கரிய நிறத்தில் காணப்படுகிறது. கடலோர கிராமங்களான மதங்கா (Matanga), வங்கு (Vangu), லவாங்கு (Lavangu) மற்றும் கங்கவா (Kangava) போன்றவை எண்ணெய்க் கசிவால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

லவாங்கு கிராமத்தில் வசிக்கும் பௌல் நெய்ல் (Paul Neil) கூறும்போது, "குழந்தைகளைக் கடலில் நீந்தக்கூடாது என சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் எங்கள் கடலையும் பவளப்பாறைகளையும் மீன் பிடிப்பதற்காகவும் கிளிஞ்சல் சிப்பிகளுக்காவும் பயன்படுத்த முடியவில்லை. எங்கள் உணவை இழந்துவிட்டோம். 150 மைல்களுக்கு அப்பால் உள்ள தலைநகர் ஹொனியராவில் (Honiara) இருந்து விநியோகிக்கப்படும் உணவை நம்பியே உள்ளோம். எதிர்வரும் காலத்திற்கும் மீன்பிடித்தல் தடை செய்யப்பட்ட ஒன்றாக மாறிவிடலாம். இந்த எண்ணெய்க் கசிவு எங்கள் வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிட்டது" என்கிறார்.

கங்கவா விரிகுடாவிற்கு அருகில் உள்ளவர்கள் குடிப்பதற்கும் மற்றவற்றிற்கும் மழைநீரைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். எண்ணெய்க் கசிவிற்குப் பின் கடற்கரையோரங்களில் இருந்த நீருற்றுகள் எல்லாம் அசுத்தமடைந்து விட்டன. எண்ணெய்க் கசிவினால் ஏற்படும் நாற்றத்தினால் பலர் தூங்க முடியாமல் உள்ளனர். ரெனெல் தீவின் மக்களுக்கு இயற்கைப் பேரழிவும் சீற்றங்களும் பழக்கமான ஒன்றுதான்.

புயல்களும் வெள்ளத்தாலும் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆனால் கடந்த மாதம் நிகழ்ந்தது மனிதர்களின் அலட்சியத்தின் பேரழிவு. தற்போது வரை எண்ணெய்ப் படலமானது ஆறு கிலோமீற்றர் வரை பரந்துவிரிந்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை அவுஸ்ரேலிய கடல்சார் பாதுகாப்பு மையம் மேற்கொண்ட வான்வழி கண்காணிப்பின் மூலம்


(22ஆம் பக்கம் பார்க்க)

# வாய்ப்பன்

வாய்ப்பன் என்பது வாழைப்பழம், மா, சக்கரை ஆகியவை சேர்த்து பின்னர் எண்ணெயில் பொரித்து எடுக்கப்படும் ஒரு பலகாரம்.

இது ஈழத்தில், குறிப்பாக தீவுப் பகுதிகளில் விரும்பி உண்ணப்படும் ஒரு உணவாகும். வாழைப்பழம் அதிகாமாக கிடைக்கும் காலத்தில், அல்லது வாழைப்பழம் அதிகம் பழுத்து விட்டால் இந்த உணவை சமைப்பர்.

ஈழத்தின் உணவகங்களில் தவறாது இடம்பிடிக்கும் சிற்றுண்டி வகைகளில் வாய்ப்பன் தவறாது இடம்பிடிக்கும். இதேபோன்ற உணவுமுறை கேரளாவிலும் உண்டு.




# பாவலர் சரித்திர தீபகம்

தமிழில் எழுந்த புலவர் வரலாற்றைக் கூறும் முதல் நூல் பாவலர் சரித்திர தீபகம். இந்நூலுக்கு The Galaxy of Tamil Poets ஆங்கிலத்தில் துணைத் தலைப்பும் வழங்கப்பட்டுள்ளது. இந்நூலை, 1859 இல் சைமன் காசிச்செட்டி என்பவர் எழுதினார். தமிழ் புளூட்டாக் நூலைத் தழுவியே இந்நூல் எழுதப்பட்டது.

இந்நூலை 1886 இல் மானிப்பாயில் இருந்த ஸ்ரோங் அன்ட் அஷ்பரி அச்சகத்தார் அச்சிட்டு வெளியிட்டார்கள். ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை என்பவரே இந்நூலை அச்சிட்டு வெளியிட்டார். காசிச் செட்டி எழுதிய புலவர்களின் வரலாற்றுடன் தானும் ஒரு தொகை புலவர்களின் வரலாற்றை சேர்த்திருந்தார்.

இந்நூலில் 410 புலவர்களின் வரலாறு இடம்பெற்றுள்ளது. காசிச் செட்டி எழுதிய 202 புலவர்களில் 13 பேர் மட்டுமே ஈழத்துக்கு உரியவர்கள். சதாசிவம்பிள்ளை 69 ஈழப் புலவர்களின் வரலாற்றை எழுதினார். எல்லாமாக இந்நூலில் 82 ஈழத்துப் புலவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

இதன் திருத்திய பதிப்பு பேராசிரியர் பொ. பூலோகசிங்கத்தின் ஆய்வுக் குறிப்புகளுடன் 1975, 1979 ஆம் ஆண்டுகளில் கொழும்பு தமிழ்ச் சங்க வெளியீடாக வெளியானது.






# துலைக்கோ போறியள்?

யாழ்ப்பாணத்தின் பேச்சு வழக்கில் துலைக்கோ போறியள் என்ற சொல் பரவலாக இருந்தது. இக்காலத்திலும் முதியவர்கள் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள்.

ஒருவர் வேலைக்கு அல்லது வேறு காரியமாக புறப்படும்போது அவரிடம் "எங்கே செல்கிறீர்கள்" எனக் கேட்பது அபசகுனமாகக் கருதப்படுகின்றது. இதனால் அவர்கள் "துலைக்கே?", "துலைக்கோ போறியள்?" என்று கேட்பார்கள்.

இப்போது கிராமப்புறங்களிலும், முதியவர்களிடமும் மட்டுமே புழங்கும் இந்தச் சொல் அருகி வருவது நமக்குப் பெரும் இழப்பே.





# அரிக்கன் சட்டி

இப்போது பெருநிறுவனங்களே விவசாயத்தில் இறங்கி விட்டன. அரிசி நிறுத்து வாங்கிய காலம் போய் பைக்கெற் அரிசியை வாங்கிப் பயன்படுத்துகிறோம். கல், மண் நீக்கியே வருகின்றன. இதனால் அரிசியை கழுவி போட்டால் மட்டும் போதும்.

இதனால் அரிசியை கிளைய வேண்டிய அவசியம் பெரிதாக இல்லை. முன்னாளில், அரிசியில் உள்ள கல், மண்ணை நீக்க அரிக்கன் சட்டி பயன்படுத்தப்பட்டது. இதன் உட்புறம் வளையங்களாக வரி வடிவில் சட்டி வடிவமைக்கப்பட்டிருக்கும். ஆரம்பத்தில் மண் சட்டியாகவும், பின்னாளில் வெண்கலம், ஈயச் சட்டிகளாகவும் வந்தன. இப்போதும் இவை சில பகுதிகளில் புழக்கத்தில் உள்ளன.

அரிக்கன் சட்டிக்குள் அரிசியை இட்டு அளவாக தண்ணியை விட்டு மெதுவாக அசைத்து எடுக்கும் போது கல் பாரம் காரணமாக அரிக்கன் சட்டி உட்புறமுள்ள வரிகளில் நிற்க அரிசி மட்டும் தண்ணியுடன் வடிக்கப்பட்டு விடும். இது அரிசியை அரிக்க மட்டுமில்லை ஏனைய தானியங்களில் உள்ள கல்லை நீக்குவதற்கும் பயன்பட்டது.


# கல்வேலி / பகிர்

நெடுந்தீவின் சிறப்புகளில் ஒன்று கல்வேலி என அழைக்கப்படும் பகிர். இது முருகைக் கற்பாறைகளைக் கொண்டு அமைக்கப்படுகின்றது. அங்கேயே விளையும் கற்களைக் கொண்டு சிறுசிறு கற்களாக அடுக்கி பெரிய கற்களாக அடுக்குவார்கள். வேறு சிலர் கல்வேலிக்கு மேலால் பனை ஓலைகளை வைத்தும் அடைத்திருப்பார்கள்.

கல்வேலி அமைப்பதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள் சிலர் இருந்தனர். பலரும் அவர்களை அழைத்தே கல்வேலி அமைத்தல், திருத்தும் வேலையை செய்தார்கள். இதனால் தொழில்முறை ரீதியாகவும் இது வளர்ச்சி பெற்றது.

நவீனத்தின் வளர்ச்சி அங்கும் தொற்றியிருப்பதால் இப்போது கல்வேலி அமைப்பது அருகி விட்டது. இதனால் கல்வேலி அமைப்பதில் தேர்ச்சி பெற்றவர்களும் அருகிவிட்டார்கள். ஆனாலும் இப்போதும் சிலர் கல்வேலிகள் அமைத்திருப்பதைக் காணலாம்.





# இது அரேபிய ஸ்டைல்

பாலைவனத்தில் ஒரு பகுதியை காட்டி, 'நாளை முதல் இந்த இடம் உனக்கு சொந்தம்", என்று அமீரகவாசியிடம் கூறியது, அல் அய்ன் மாநகர சபை.

அந்த அரபியோ, 'இந்த இடத்தில் நான் என்ன செய்ய?", என்று கேட்டார்.

'இந்த இடத்தில் நீங்கள் தக்காளி பயிரிட போகிறீர்கள்", என்றனர் அதிகாரிகள். அந்த அரபிக்கு ஆச்சரியம்.

'எவ்வாறு இது சாத்தியம்?", என்று கேட்டார்.

'அதை நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்றனர் அதிகாரிகள். அந்த அரபிக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பாலைவன மண்ணை சுமார் 5 அடிக்கு அள்ளி வெளியேற்றினார்கள், பிறகு பயிரிட தோதுவான மண்ணை அந்த இடத்தில் கொட்டினார்கள். தண்ணீர் வசதியை அங்கே கொண்டு வந்தார்கள். தக்காளி பயிரிட்டார்கள், நல்ல விளைச்சல்.

தக்காளி நன்றாகக் காய்க்கத் தொடங்கியது. அந்த இடத்தின் சொந்தக்காரராக அறிவிக்கப்பட்ட அந்த அரபி சும்மா வேடிக்கை மட்டும் பார்த்து கொண்டு இருந்தார். அறுவடை நடநதது. அரசே அந்த தக்காளிக்கு உரிய விலை கொடுத்து அந்த அரபியிடம் வாங்கியது, வாங்கிய தக்காளியை சில பரிசோதனைகளுக்கு பின்பு கொண்டு போய் குப்பையில் கொட்டினார்கள்.

பிறகும் அதே போல அனைத்து செலவையும் அரசே செய்துவிட்டு, தக்காளியையும் விலை கொடுத்து வாங்கினார்கள். இரண்டாவது, மூன்றாவது முறையும் பரிசோதனைக்கு பிறகு தக்காளியை கொண்டுபோய் குப்பையில் கொட்டினார்கள். நான்காவது முறையும் தக்காளி நல்ல விளைச்சல். அதையும் பரிசோதனை செய்தார்கள். எதிர்பார்த்த நல்ல பலன் கிடைத்தது. அந்த தக்காளி மனிதர்கள் உண்ணும் அளவிற்கான சுவையை கொண்டிருந்தது. அந்த தக்காளியை குப்பையில் கொட்டாமல், தக்காளி பேஸ்ட் தயாரித்து விற்பனைக்கு அனுப்பினார்கள்.

சும்மா வெறுமனே நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த அந்த அரபிக்கு அதன் லாபத்தை கொடுத்தார்கள்.

பின்பு தக்காளி பழமாக சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பினார்கள். அதன் லாபத்தையும் அந்த அரபிக்கே கொடுத்தார்கள். ஐந்தாவது விளைச்சல் ஆரம்பிக்க போகும் போது, அந்த அரபியை அழைத்து, இதுதான் விவசாயம். இனி நீதான் விளைவிக்க வேண்டும் என்று கூறினார்கள்.


இப்படித்தான் பாலைவன மக்கள் விவசாயத்தை கற்றுக்கொண்டார்கள். ஐக்கிய அரபு அமீரகத்தில் அல் அய்ன் ( Al Ain) என்ற இடத்தில் விவசாயம் பிறந்த முறை இது. தற்போது, நகரின் அன்றாட தேவைக்கான அத்தனை காய்கறிகளும் விளைவிக்கப் படுகின்றன. இன்னும் சில வருடங்களில் அவர்கள் தன்னிறைவு அடைவார்கள், கோழி பண்ணை, பால் பண்ணை போன்றவைகளும் இங்கே அதிகரித்துள்ளன.

பெற்றோல் ஏற்றுமதியை போலவே, உணவு பொருட்களையும் அரபு நாடுகள் ஏற்றுமதி செய்தாலும் ஆச்சரியம் இல்லை.

---

## இயற்கைக்கு வழி

### முட்டை ரசம் - பயிர் வளர்ச்சி ஊக்கி



**தேவையான பொருட்கள் :**

1. முட்டை - 10
2. எலுமிச்சை சாறு
3. சர்க்கரை - 400 கிராம்

பிளாஸ்ரிக் பாத்திரத்தில் பத்து முட்டைகளை குறுகிய முனை கீழிருக்குமாறு வைத்து அவைகள் மூழ்குமளவிற்கு எலுமிச்சை சாற்றினை விட வேண்டும். அதற்குப்பிறகு இருநூறு கிராம் சர்க்கரையை பூரிதக்கரைசலாக நீரில் கலந்து அப்பாத்திரத்தில் ஊற்றி மூடி வைத்துவிடவேண்டும். பத்து நாட்களுக்கு பிறகு திறந்து பார்த்தால் முட்டை கூழ் வடிவில் மாறிவிடும்.

இதைக் கையால் பிசைந்து மீண்டும் இரு நூறு கிராம் சர்க்கரைக் கரைசலை ஊற்றி பத்து நாட்கள் மூடி வைத்துவிட வேண்டும். இதன் பின்னர், முட்டை ரசம் தயார். பிறகு அதை வடிகட்டி 10 லீற்றர் நீரில் இருநூறு மில்லி வீதம் கலந்து தெளிக்கலாம். மிகச்சிறந்த பயிர் வளர்ச்சி ஊக்கியாகும்.

---

## ஏர் பின்னது உலகம்

# செர்ரி தக்காளியில் புதிய தொழில்நுட்பம்...



அய்கா மயுரா என்ற பெண், ஜப்பான் நாட்டு கணனித் துறையில் வேலை பார்த்து வந்துள்ளார். அவருக்குப் பெண் குழந்தை பிறந்ததால், குழந்தையையும் கவனித்துக் கொண்டு வேலைக்கும் செல்ல முடிய வில்லை. அதனால், வீட்டிலிருந்தே வருமானம் ஈட்டும் வகையில் ஒரு தொழிலைத் தொடங்க யோசித்து, விவசாயம் செய்ய முடிவு செய்துள்ளார்.

இதைத்தொடர்ந்து, காய்கறிகளை விளைவித்துச் சந்தைப்படுத்தும் வகையில், 'டிராப் இன் கார்ப்ரேஷன்' (Drop inc) என்ற சிறுதொழில் நிறுவனத்தை ஆரம்பித்தார். அந்தச் சமயத்தில் 'ஹைட்ரோ ஜெல்' (Hydrogel) பைகள்மூலம் செர்ரித் தக்காளியை விளைவிக்க முடியும் என அவருக்குத் தெரிய வந்துள்ளது. ஹைட்ரோ ஜெல், குழந்தைகளுக்குப் பயன்படுத்தும் டையப்பர்ஸில் தண்ணீரை உறிஞ்சி வைத்துக்கொள்ளக்கூடிய பொருள்.

அதோடு, தீமை தரும் நுண்ணுயிரிகளை உள்ளே விடாத அளவு நானோ (Nano) துளைகளையும் இது கொண்டிருக்கும். தொடர்ந்து ஹைட்ரோ ஜெல் மூலம் தக்காளி உற்பத்தியில் இறங்கிவிட்டார், அய்கா மயுரா. இப்படி உற்பத்தி செய்யப்படும் செர்ரி தக்காளியில் அதிகளவு லைகோபீன் (Lycopene) நிறமி இருப்பது, உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



இப்போது, டிராப் இன் கார்ப்ரேஷன் நிறுவனத்தில் பல தாய்மார்கள் வேலை செய்கிறார்கள். இத்தொழில்நுட்பம் மூலம் ஸ்ட்ராபெர்ரி, வெள்ளரி மற்றும் மிளகு ஆகியவற்றைக்கூட உற்பத்தி செய்ய முடியும். ஹைட்ரோ ஜெல் முறைக்கு ஹைட்ரோ போனிக்ஸைவிடக் குறைந்த அளவே தண்ணீர் தேவைப்படுகிறது.

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## தமிழற்றை வோட்டில்லாமல் நான் வெல்லுவன். இருந்து பாருங்கோவன்!

தமிழற்றை வோட்டில்லாமல் நான் வெல்லுவன். ஒருத்தரும் என்னோடை சேட்டை விடேலாது. எனக்கு என்னிலை நம்பிக்கை இருக்கு. என்ரை இன சனம், என்ரை உடன் பிறப்பு, என்ரை சிங்க லே, என்ரை பொது பல சேன, என்ரை ஆக்களின்ரை சப்போட்டே எனக்குப் போதும். அவையின்ரை ஆதரவோடை நான் ஜனாதிபதியாக வந்திடுவன். வந்து பாருங்கோவன்...என்ன செய்யப் போறன் எண்டு?

முந்தி அண்ணை ஜனாதிபதித் தேர்தலிலை 2010 இலை கேக்கேக்கை தமிழரே அவருக்கு வோட்டுப் போட்டவை? அவை போடேல்லை. இருந்தும் பதினெட்டு லட்சம் வோட்டாலை வெண்டவர். 2015இலை அண்ணை தோத்தவர். அப்ப கூட வடக்கிலை ஒருலட்சம் சனம் அண்ணைக்கு வோட்டுப் போட்டவை. அதை இல்லையெண்ணேல்லை. ஆனால் அவற்றை தோல்விக்குத் தமிழரும், முஸ்லிம் ஆக்களும் வோட்டுப் போடாததுதான் காரணம் எண்டு சொல்லவராதையுங்கோ. அதை ஒரு நாளும் ஏற்க மாட்டன்.

கொழும்பு. கம்பஹா மாதிரியான இடத்திலை சிங்கள ஆக்களே அவருக்குப் போடேல்லை. அதாலைதான் தோத்தவர். இப்ப அந்தச் சனத்துக்கு எங்கடை அருமை விளங்கீட்டுது. அதாலை இந்தமுறை நான் கேட்டால், நான் தான் வெல்லுவன். வேணுமெண்டால் இருந்து பாருங்கோவன்? உங்களுக்குத் தெரியுமோ? அண்ணையும் குடும்பமும் விட்ட சில சில பிழையாலைதான் அவரும் தோத்தவர். நாங்கள் அப்பிடி இல்லை. எங்கடை கையளைப் பாருங்கோ. ஒரு சின்ன ஊத்தைதன்னும் இருக்கோ எண்டு.

சண்டை செய்தனாங்கள்தான். அது எங்களுக்கும் பிரபாகரன்ரை ஆக்களுக்கும் தான் சண்டை நடந்தது. நாங்கள் ஒரு நாளும், அதுகும் எங்கடை சகோதரம் மாதிரியான தமிழ் ஆக்களோடை சண்டைப் பிடிக்கேல்லை. அதுகும் சண்டை முடிஞ்ச மற்ற நாளே , கீரிமலை, தொண்டைமானாறு, வசாவிளான் இப்படிப்பட்ட இடங்களிலை இருக்கிற ஆமியை எடுத்துப்போட்டு சனத்தின்ரை இடங்களை உடனை விட்டிட்டம். சனமும் வலு சந்தோஷமா வந்து குடியேறிச்சினம். வேணுமெண்டால் அப்பிடிப்பட்ட இடங்களிலை இருந்திட்டு வந்த ஆமிக்காறரைக் காட்டுறன் கேட்டுப்பாருங்கோ. என்ன சொல்லினமெண்டு?

நான் பாதுகாப்புச் செயலாளரா இருக்கேக்கை கன காணியளை விட்டிட்டன். பிறகு வந்த மைத்திரி அண்ணை நாங்கள் விட்ட காணியளையும் சேத்துத் தான் விட்டனானெண்டு சொல்லித்திரியிறார். பாவம் சொல்லட்டன்! பலாலியிலை கொஞ்சக் காணியளைத்தான் விடாமல் வைச்சிருந்தனாங்கள். அது ஏனெண்டால் அதிலை கொஞ்சம் சனத்துக்குப் பிரச்சினையான சாமான்கள், கெமிக்கல் எண்டு கனக்க விசியங்களை அப்ப புலியள் இருக்கேக்கை தாட்டுவிட்டிட்டுப் போட்டினம். அதைக் கிளறிப் போட்டு விடுறம் எண்டு சொல்ல உங்கடை ஆக்கள் கேக்கேல்லை. அதுக்கு எங்களோடை சண்டை சச்சரவுக்கு வந்திட்டினம். பிறகு அதைத்தான் ஆமிமார் கொஞ்சம் கொஞ்சமாக் கிழறித் துப்பரவாக்கினப் பிறகு மைத்திரி கொக்கரிச்சுக் கொக்கரிச்சுக் கொஞ்சம் கொஞ்சமா விட்டுக் கொண்டு இருக்கிறார்.

எங்களுக்குத் தேவை எண்டு கண்ட காணியளை எடுத்தனாங்கள். சும்மா எடுக்கேல்லை. காசைக் குடுத்துத்தான் எடுத்தம். நான் இருக்கேக்கை மொத்தம் மூண்டு இலட்சம் சனத்தைக் குடியேத்திப்போட்டம். (தயவு செய்து குடியேத்தின ஆக்களை ஆரெண்டு கேக்காதையுங்கோ. கேட்டால் அழுதிடுவன்)

சண்டை முடிஞ்ச உடனை ஆக்களை ஏன் சண்டை நடந்த இடத்துக்கை போக விடேல்லைத் தெரியுமே? சண்டை நடந்த இடம் எப்பிடி இருந்ததெண்டு எனக்கெல்லோ தெரியும்? அதுக்கை போய் சனம் அவலப்படப்பிடாதே எண்ட நல்ல நோக்கத்திலைதான் அவையளை மறிச்சு வைச்சனான். அதுக்கு எங்களைப் பிடிக்காத சில சனம் சொல்லிச்சுதாம், கிடந்த லொறியளையும், மோட்டச் சைக்கிளுகளையும், சமான் சக்கட்டையும், நகை நட்டையும் ஏத்தத்தான் சுணக்கினதெண்டு. அதை நம்புறியளோ? அப்பிடி இந்த கோத்தா செய்திருப்பனோ?

ஏன் இப்ப கிளிநொச்சியிலை பெரியாஸ்பத்திரியா இருக்கிற கட்டிடத்தை அப்ப ஆமிதான் வைச்சிருந்தவை. நான் போய் சொன்னன் தமிழ் ஆக்கள் பாவம் விட்டிட்டு வாங்கோ எண்டு. அவையும் மறுமொழி இல்லாமை எழும்பி வந்திட்டினம். இதிலை நான் சொன்ன அத்தனையும் 201[illegible] - 2014 க்கு இடையிலை நடந்த விசியம். அதுக்குப் பிறகு என்ன மாதிரித் தெண்டா எடுக்கிறியள். ஏதாச்சும் நடக்குதே? மைத்திரி என்ன மாதிரி எல்லாம் பேக்காட்டுறார்.

நல்ல காலம் அண்ணை வெண்டிட்டார் எண்டு கேட்ட உடனை நானும் பசில் ஐயாவும் ஓடி வந்தது. இல்லாட்டிச் சனம் அண்ணையை ஏமாத்தி இருப்பினம். அவரும் பேய் மாதிரிக் காட்டுற இடங்களிலை கையெழுத்தை வைச்சிருப்பர்.

மகே ...அம்மே! மேலை நான் என்ரை பாஷையிலை சொன்ன அத்தனையையும் . கோத்தபாய ஒரு இங்கிலிஷ் பேப்பருக்கு சொல்லி இருக்கிறார் எண்டு கேள்விப்பட்டம். இந்த அவலத்தை, இந்தக் குத்துக் கரணத்தை, இந்த அக்கிரமமான கதையளை நாங்கள் ஆரிட்டைச் சொல்லி அழ?

**- கோளரங்கன்**

## வாசகர் கடிதம்

ஆசிரியருக்கு
புதுவிதி - யாழ்ப்பாணம்

ஐயா

போனவாரப் புது விதியில் திருக்கேதீஸ்வரத்துப் பிரச்சினை பற்றி எழுதியிருந்தீர்கள். பொதுவாகத் தமிழ் பேசுகிற எல்லாருக்கும் ஒரு வருத்தமான விடயம் என்றுதான் சொல்ல வேண்டும்.

மன்னாரிலை இருக்கிற ஆட்களுக்கு இது ஒரு புதிய விடயம் அல்ல என்றுதான் சொல்ல வேண்டும். முன்னரும் இது சிறிய அளவில் கத்தோலிக்கர் அல்லாத கிறிஸ்தவ குழுக்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் அவ்வப்போது பிரச்சினைகள் வந்திருக்கிறது. ஆனால் ஒரு மரியாதைக்குரிய கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு குருவின் ஆதரவோடு இப்படியான நடவடிக்கைகளுக்கு துணிந்திருக்கிறார்கள். மதங்களுக்கிடையே நேசத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய மத குருவும் அதில் சேர்ந்து கொண்டதுதான் மன வருத்தத்திற்குரியது.

முக்கியமாக இதை ஏன் எழுதுகிறேன் என்றால் அந்தச் சம்பவங்களின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களில் உள்ளவர்கள் அனைவரும் அப்பாவிகள். மதத்தின் பெயரால் ஏவிவிடப்பட்டவர்கள். அவர்களுக்குப் பின்னால் ஒரு பெரும் தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர் இருக்கிறார் என மன்னார் மக்கள் சந்தேகப்படுகிறார்கள். அவர் வெள்ளை உடுத்து பொது இடங்களிலே அனைத்துத் தமிழ் மக்களையும் கட்டித் தழுவுவதுபோல நாடகம் ஆடினாலும் சமயம் என்று வரும்போது ஒரு விசப் பாம்பாக மாறிவிடுவார் என்று மக்கள் சொல்லுகிறார்கள்.

எனவே இதை ஒரு மத நடவடிக்கையாகப் பார்க்க வேண்டாம் என்று தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். இது ஒரு அரசியல்வாதியின் பழிவாங்கல் நடவடிக்கையாகப் பாருங்கள். என்ன கோப தாபம் இருந்தாலும் அந்த நேரத்தில் இந்துக்களின் முக்கியமான நாளில் அதைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் அந்த நேரத்தில்தான் இது போன்ற விடயங்களைச் செய்ய வேண்டும் என்பதுதான் அந்த அரசியல்வாதியின் விருப்பமாம்.

இதுபோல விடயங்களை அனுமதித்தோமானால் தமிழ் தேசியம் என்பது ஒரு கேள்விக்குறியாக மட்டுமல்ல, கேலிக்குரியதாகவும் மாறிவிடும். பிரச்சினை நடந்த அடுத்த நாள் இங்கு ஒரு போஸ்டர் ஒட்டப்பட்டது. அதில் தமிழ் பிழைகள் இருந்தது. எனவே அதை யார் அடித்து ஒட்டி இருப்பார்கள் என்றதை ஊகித்துக் கொள்ளுங்கள், எரியிற நெருப்பில் எண்ணை ஊற்றுவதைப்போல அதனைச் செய்து இருக்கிறார்கள். அதுவும் கண்டனத்துக்குரிய விடயம் என்றுதான் சொல்ல வேண்டும்.

உங்களைப் போன்ற பத்திரிகைகளால்தான் உண்மைகளை வெளிக் கொண்டு வர முடியும். அந்த அரசியல்வாதியின் முகத்திரையைக் கிழித்து அவரை நடுத்தெருவுக்குக் கொண்டு வாருங்கள். அப்படியென்றால்தான் தமிழ் தேசியம் காப்பாற்றப்படும். அடுத்த தேர்தலுக்கு முன்பு அந்த அரசியல்வாதி இது போன்று பலதைச் செய்து அரசியல் லாபம் தேடலாம். அதற்கு நாங்கள் முந்திக் கொள்ள வேண்டும் என்று தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்

நன்றி

சா[illegible]
சின்னக்கடை - மன்னா[illegible]

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு 69

நன்றி:தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

தொலைத்தொடர்பு அறையிலிருந்து சிவம் சிரித்த முகத்துடன் வெளியே வந்தான். சுகுணன் ஆவலுடன் அவனிடம் போய், "என்ன சிவமண்ணை என்னவாம்?", எனக் கேட்டான்.

சிவம், "ஒரு பெரிய தாக்குதலுக்கு எந்த நேரமும் திடீரெண்டு வெளிக்கிடத்தக்க வகையில் தயாராய் இருக்கட்டாம்", என்றான். அவன் வார்த்தைகளில் எல்லையற்ற மகிழ்ச்சி இழையோடியது.

ரூபா, "பெரிய தாக்குதலோ... எதுவாயிருக்கும்?" எனக் கேட்டாள்

"அதைப்பற்றி ஒண்டும் சொல்லேல்ல... வழக்கமாய் சொல்லுறேல்லதானே... நான் நினைக்கிறன்...", எனக் கூறிவிட்டு இடை நிறுத்தினான் சிவம்.

"சொல்லுங்கோ... நீங்க நினைச்சதும் நான் நினைச்சதும் ஒண்டோ எண்டு பாப்பம்", என ஆவலுடன் கேட்டாள் ரூபா.

"இப்ப இரண்டு, மூண்டு நாளைக்கிடையிலை ஆமி மூண்டு முறிப்பிலை ஒரு காம்ப் போட்டிருக்கிறானாம். மூண்டு முறிப்பு ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடம். பாண்டியன் குளம் போகலாம். காட்டுக்கை இறங்கினால் புளியங்குளம் எங்கடை காவலரண்களுக்குப் பின்னாலை புதூரிலை மிதக்கலாம். பாலைப்பாணிக் காலை இறங்கி வவுனிக்குளம் அலைகரையிலை ஏறலாம். இவ்வளவையும் பாதுகாக்க எங்களிட்டை ஆளணி போதாது. அந்த முகாமை அகற்றிவிட்டம் எண்டால் ஆமிக்கு இவ்வளவு சாதகமான நிலையும் இல்லாமல் போய்விடும்",

"நீங்கள் உண்மையிலேயே காட்டுப்புலிதான்", என்றான் சுகுணன்.

"அப்பிடியில்லை... இலுப்பைக் கடவை மட்டும் வந்த ஆமி அதை ஒயப்போட்டிட்டு மூண்டு முறிப்பை பிடிக்கிறான் எண்டால் யோசிக்கத்தானே வேணும்."

"ஓமோம் அவங்கள் வடிவாய் பலப்படுத்த முந்தி இப்பவே அடிச்சுப்போட வேணும்", என்றாள் ரூபா.

"என்ரை ஊகம் இது. வேறை எங்கையும் தாக்குதலாயும் இருக்கலாம்" என்றான் சிவம்.

"அப்பிடியெண்டாலும் இவங்களை அடிச்சுக் கலைச்சால்தான் நித்திரை வரும்", என்றான் சுகுணன்.

ரூபா, "உங்களுக்கு அடிச்சுக் கலைச்சாத்தான் நித்திரைவரும். எனக்கு அடிச்சுக் கலையாட்டில் நித்திரை வந்தாலும் கொள்ள முடியாது", என்றாள்.

"ஏன்?"

"கணேசிட்டை பேச்சு விழுமே", என்றாள் மெல்லிய புன்னகையுடன்.

"நல்ல காதலனும், நல்ல ஒரு காதலியும்", என்றுவிட்டு கடகடவெனச் சிரித்தான் சுகுணன்.

கணேசிடம் ஏச்சு வாங்குவதைக் கூட பெருமையாகக் கருதும் ரூபாவை நினைக்க சிவத்துக்கு பெரும் வியப்பாகவிருந்தது.



• • •

அன்று மாலை முழங்காவில் முருகன் கோவிலில் போராளிகளின் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது. அப்பகுதி மக்களும் இடம்பெயர்ந்த மக்களுமாக ஏராளமானோர் அங்கு கூடியிருந்தனர். அரசியல் துறையைச் சேர்ந்த ஒரு போராளி உணர்ச்சிவசமாக உரையாற்றிக் கொண்டிருந்தான். முன்னேறிவரும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட, பெரும் ஆயுத தளபாட வசதி கொண்ட அரச படைகளுக்கு எதிராகப் பல முனைகளிலும் சில ஆயிரம் போராளிகளே போராட வேண்டிய நிலை இருப்பதை அவன் தெளிவுபடுத்தினான்.

மேலும், பல மாவீரர்களதும் போராளிகளதும் உயிர்த் தியாகம் உட்படப் பல்வேறு அர்ப்பணிப்புக் களாலும் கைப்பற்றப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் ஒவ்வொன்றாக பறிகொடுக்கப் பட்டுவரும் துரதிர்ஷ்டமான நிலைமையைச் சுட்டிக்காட்டினான். விடுதலை அமைப்பின் ஆட்தொகை பற்றாக்குறையை ஈடுசெய்ய வீட்டுக்கு ஒருவராவது போராளியாக இணையவேண்டும் எனக் கேட்டுக்கொண்டான். சில குடும்பங்களில் இருவர், மூவர், நால்வர் பங்களிப்பை வழங்கும் போது சில குடும்பங்கள் போராட்டத்தில் கலந்துகொள்ளாமல் இருப்பது தொடர்பாக அவன் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தான். விருப்பமானவர்கள் இப்போதே இணைந்துகொள்ள முடியும் எனக்கூறி அவன் தனது உரையை நிறைவு செய்துகொண்டான்.

பரமசிவமும் முருகரும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். தூரத்திலிருந்தே முருகரைக் கண்டுவிட்ட கந்தசாமியும் அவர்களின் அருகில் வந்து அமர்ந்து கொண்டான்.

முருகர் மெல்ல பரமசிவத்திடம் சொன்னார், "ம்... வயது போட்டுது... இல்லாட்டில் நான்தான் முதல் ஆளாய் போய் நிப்பன்", என்றார்.

கீரிசுட்டானில் பாலம்பிட்டியில் இருக்கும்போது பல்வேறு வழிகளில் போராளிகளுக்கு உதவி செய்தமையையும் தற்போது அந்த வாய்ப்புக்கள் போய் விட்டதையும் நினைக்கும்போது அவரின் மனம் சஞ்சலப்பட்டது.

"எனக்குமண்ணை இப்பவே போய்ச் சேரவேணும் போல கிடக்குது. மனுஷி மாதமாய் இருக்கிறாள். நான் போனால் பாவம் அவள் பிறகு என்ன செய்யிறது?", எனக் கவலைப்பட்டான் கந்தசாமி.

பல இளைஞர்களும் யுவதிகளும் எழுந்துபோய் தாங்கள் போராளிகளாக இணையப்போவதாகத் தெரிவித்தனர். அதில் ஒரு இளைஞனை கூட்டத்தில் உரையாற்றிய அரசியல்துறைப் போராளி தன்னருகில் அழைத்தான்.

"தம்பி உங்கடை ஒரு அண்ணா மாவீரர். மற்ற அண்ணா போராளியாய் இன்னும் களத்திலை நிக்கிறார்... நீர் வீட்டை போம்" அந்த இளைஞன் குறுக்கறுத்துக் கேள்வி கேட்டான்.

"இந்த மண்ணைப் பாதுகாக்க அண்ணாமாருக்கு உள்ள உரிமை எனக்கில்லையே?" அரசியல் துறைப் போராளி மட்டுமன்றி அங்கிருந்த அனைவருமே திகைத்துப் போய்விட்டனர்.

"அப்பிடியில்லை தம்பி... அப்பா அம்மாவுக்கு துணையாய் நீர் ஒரு பிள்ளையெண்டாலும் இருக்க வேண்டாமே?" எனத் தயக்கத்துடன் கேட்டான் போராளி.

அந்த இளைஞன் சலிக்கவில்லை, "நான் கிபிரிலையோ செல்லிலையோ செத்தால் அப்பா, அம்மாவை ஆர் பாக்கிறது?" எனக் கேட்டான், அவன் எவ்வித தயக்கமுமின்றி.

இச்சம்பவம் பரமசிவத்தை உலுப்பிவிட்டது. எந்த நேரமும் போராளிகளுடனேயே உதவி செய்துகொண்டு திரியும் சுந்தரம் கூட இப்படியான ஒரு முடிவுக்கு வரக்கூடும் என அஞ்சினார். ஒவ்வொரு விநாடியும் சிவத்தை நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் அவர் சுந்தரமும் போராளியாகிவிட்டால் அதைத் தான் தாங்கிக் கொள்ள முடியாதெனவே நம்பினார். அதைவிடப் பார்வதியை எவ்விதத்திலும் ஆற்றுப்படுத்த முடியாதென்பதையும் அவர் நன்கு புரிந்துகொண்டிருந்தார்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)

# அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா படைப்புகள் நூல் வெளியீட்டு விழா




சு.குணேஸ்வரன்

அல்வாயூர் கவிஞர் மு.செல்லையாவின் படைப்புக்கள் உள்ளடங்கிய பெருந்தொகுதியின் வெளியீட்டு விழா நாளை (17.03.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யா/தேவரையாளி இந்துக் கல்லூரி க.மூ.சின்னத்தம்பி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. கவிஞர் மு.செல்லையா 'ஈழகேசரி' காலப் படைப்பாளிகளில் ஒருவர். சைவப்பெரியார் கா.சூரனின் மாணாக்கர் பரம்பரையின் முதல்வித்து.

அவரிடம் சமயம், மொழி, இலக்கியம், ஆகியவற்றைக் கற்றதோடல்லாமல் தமிழில் விசேடதேர்ச்சி பெறும் பொருட்டு கரவெட்டிப் பண்டிதர் க. மயில்வாகனம் உபாத்தியாரிடம் இலக்கண, இலக்கிய நூல்களையும் சமய அறிவுக்கு அடிப்படையாகப் புராணத்தையும் சைவப்பெரியாரின் வழிகாட்டலிலேயே கற்றுத்தேர்ந்தார். பிற்காலத்தில் மதுரைப்பண்டிதர் பரீட்சைக்காக பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, வித்துவான் ந. சுப்பையாபிள்ளையிடமும் பாடங் கேட்டார்.

1927 ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்து கொண்டு வெளியேறினார். தேவரையாளி சமூகத்தின் மத்தியில் இருந்து தோன்றிய 'முதலாவது பயிற்றப்பட்ட சைவ ஆசிரியன்' என்ற பெருமையும் பெயரும் கவிஞருக்கே உரியது. பண்டிதர், ஆசிரியர், தலைமையாசிரியர், கவிஞர், கட்டுரையாளர், நாடகாசிரியர், சோதிடர், சமூக விடுதலை விரும்பி, சமூகமுன்னோடி ஆகிய பல்பரிமாண ஆளுமை மிக்கவர். சைவசமய அபிமானியாகவும் காந்தியக் கொள்கைளின் பால் ஈர்க்கப்பட்டு காந்தியத்தின் மீது ஆராக்காதல் கொண்டு கதர் உடையணிந்து காந்தியவாதியாகவே தன்வாழ்வை மேற்கொண்டவர்.

இப்பெருந்தொகுதியின் பதிப்பாசிரியர்களான கலாநிதி சு.குணேஸ்வரன் மற்றும் மா.செல்வதாஸ் இருவரும் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கவிஞர் மு.செல்லையாவின் படைப்புக்களைத் தேடிக்கண்டடைந்து 632 பக்கங்களில் பெருந்தொகுதி ஆக்கியிருக்கிறார்கள்.

நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்பீடப் பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதி தலைமை வகிக்கிறார். நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக வியாபாரக்கற்கைகள் பீடாதிபதி

(13ஆம் பக்கம் பார்க்க)




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை' , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.



இனி மறுபடியும்
முதலில் இருந்து ஆரம்பித்திட இயலாது
கண்களால் நேசம் உரைத்திட்ட காலங்கள்
பாராதது போலே பட்டு விலகிய பார்வைகள்
தடம் பற்றிப் பின்தொடர்ந்த பருவங்களென
எதையும் இனி மறுபடியும்
முதலில் இருந்து ஆரம்பித்திட இயலாது.

அன்பு சொட்டச்சொட்ட எழுதித்தீர்த்த
கடிதங்கள்
உறக்கம் தொலைத்து கண்டு வந்த கனவுகள்
அருகில் வரத் தடுமாறிப்போன
வார்த்தைகளென
எதையும் இனி மறுபடியும்
முதலில் இருந்து ஆரம்பித்திட இயலாது

அன்பே நீ கேட்கிறாய்
மறுபடியும் ஒரு நேசத்தை
மன்னித்து விடு !
நம்பிப்பற்றிய கரங்களைப் பிடிவாதமாய்
உதறித்தள்ளிய பின்னர்
மொத்தப் பேரன்பையும்
ஒரு கண்ணாடிக்கோப்பையாய்
போட்டுடைத்ததன் பின்னர்
இனி எதையும் நம்மால்
முதலில் இருந்து ஆரம்பித்திட
இயலாதுதானே !

- நிஸ்கா முக்தார்

# ஜமீலின் 'ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம்' நூல் வெளியீட்டு விழா

- சி.விமலன்

கிழக்கிலங்கையின் அம்பாறை மாவட்டத்தில் மருதமுனை கிராமத்தில் பிறந்த ஜமீல் ஈழத்தின் குறிப்பிடத்தகுந்த கவிஞர்களில் ஒருவர். 1993 ஆம் ஆண்டு சிறுவர் இலக்கியத்திற்கான தேசிய விருதை பெற்றவர். இவரது 'தனித்தலையும் பறவையின் துயர் கவியும் பாடல்கள்' 2007 யாழ்.இலக்கியப் பேரவையின் கவிஞர் ஐயாத்துரை விருதையும் தடாகம் இலக்கிய வட்டத்தின் கலைத்தீபம் விருதையும் பெற்றது. 'உடையக் காத்திருத்தல்' 2010 கொடகே சாகித்திய விருதின் இறுதிச்சுற்றுச் சான்றிதழையும் பெற்றது.

கவிதைகளை படிமங்களின் குவியல்களாகவும் இருண்மையின் ஓர் அங்கமாகவும் கருதும் கவிஞர்களுக்கு மத்தியில் வாசகர்களின் புரிதலுக்குச் சவால்விடுக்கும் எந்தவித பிரயத்தனத்தையும் ஜமீலின் கவிதைகள் கொண்டிருப்பதில்லை. எளிமையே இவரது கவிதையின் பலம் என்றாலும் அதன் ஊடாக அவர் முன்வைக்கும் சமூக விமர்சனம் கனதியானது. தனது கவிதைகளின் பாடுபொருளாக பல்வகைத்தன்மையை அவர் பிரதிபலித்திருந்தாலும் சிறுவர்களின் வெளியை சித்திரிப்பதில் இவருக்குள்ள ஈடுபாடு அலாதியானது. அதுவே இவரை ஏனைய கவிஞர்களிடமிருந்து வேறுபடுத்தும் பிரதான அம்சமாகவும் விளங்குகின்றது எனலாம்.

ஏற்கனவே ஜமீலின் 'தனித்தலையும் பறவையின் துயர் கவியும் பாடல்கள்', 'உடையக் காத்திருத்தல்', 'காற்றை அழைத்துச் சென்றவர்கள்', 'தாளில் பறக்கும் தும்பி', 'சிறகு முளைத்த ஊஞ்சல்', 'அவன் பையில் ஒழுகும் நதி' ஆகிய கவிதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. அந்த வரிசையில் இன்று (மார்ச் 16) 'ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம்' நூல் வெளிவருகின்றது. இதன் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மருதமுனை மருதூர் கனி நூலக கேட்போர் கூடத்தில் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா தலைமையில் நடைபெறவுள்ளது. எதிர் பிரதிகள் பதிப்பகம் இந்த நூலை வெளியிட்டுள்ளது.




இந்நூலின் பின்னட்டைக் குறிப்பில் கவிஞர் அனார்,

'என்னிடம்
அன்பென்ற பெயரில்
ஒரு வாலாட்டி வளர்கிறது
என்னிடம்
வாழ்வென்ற பெயரில்
ஒரேயொரு வாழ்விருக்கிறது'

ஜமீலின் இந்த வார்த்தைகளில் இருக்கின்ற அன்புணர்ச்சி பரிபூரண தவிப்பிலிருந்து நிரந்தரமற்றதும் தடுமாற்றங்களுடையதுமான வாழ்விலிருந்து தோன்றுகின்ற சொற்களாகும். ஜமீலின் நம்பிக்கைகள் ஈரமலர்களைப் போல் வெயிலில் காய்கின்றன. கனவுகள் உடைந்து விடும் நீர்க்குமிழியில் பிரதிபலிக்கும் நிறத்தீற்றல்களாக அலைகின்றன. அவருக்குள் ஊற்றெடுக்கும் குழந்தையின் பரிசுத்தமானது வளர்ப்பு நாயின் கண்களைப் போல குழந்தைகளைப் பாதுகாக்கும் பாசத்தின் காவலாக உற்று நோக்கியபடியே இருக்கின்றன. இவ்விதம் தொகுப்பு முழுக்க கருணையின் நீர்மை ஊறிக்கிடக்கிறது. வாழ்வை அழகுபடுத்தும் மாயத் தூரிகை அவருடைய மொழியாகும் என்று பதிவு செய்துள்ளார்.

ஓர் உச்சமான படைப்பாளியாக இருப்பதைக் காட்டிலும் ஓர் உன்னதமான மனிதனாக இருக்க வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் உச்சமான கவிதைகளைப் படைக்க முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர் ஜமீல். அந்த நம்பிக்கை நிலைபெறும் வகையில் அவரது கவிதைகள் தொடர்ந்தும் பிரவாகிக்க இத்தருணத்தில் வாழ்த்துகிறேன்.

# இமா ஹேயித்தால்

## பெண்களுக்கான சந்தை பெண்களே நிர்வகிக்கின்ற சந்தை



பின்பற்றப்படவேண்டிய முன்னுதாரணம்

ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு ஒரு நூற்றாண்டு அல்லது இரு நூற்றாண்டை எட்டியதாகத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இது ஐநூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற அதுவும் ஒரு பெண்கள் முயற்சி பற்றி அறியும்போது வியப்படையாது இருக்க முடியுமா?

ஐயாயிரத்துக்கு மேற்பட்ட வியாபாரிகள் ஏறத்தாழ 500 வருடங்களாகக் கூடி வியாபாரத்தை மேற்கொள்கின்றனர். இதில் அதிசயம் என்னவெனில் இந்த வியாபாரிகள் எல்லோரும் பெண்கள் என்பதுதான். இங்கு "இமா ஹேயித்தால்" என்று இதை அழைக்கின்றனர். இமா ஹேயித்தால் என்றால் அன்னையரின் சந்தை என்று தமிழில் பொருள்படும்.

இது ஆரம்பிக்கப்பட்டதே ஒரு கதை. அதுவும் சுரண்டப்படும் தமது வளங்களைப் பாதுகாக்க வென்று பெண்களால் ஆரம்பிக்கப்பட்டது. பிரித்தானிய ஏகாதிபத்திய அரசு இந்தியாவை ஆட்சி செய்தபோது வட இந்தியாவிலுள்ள மணிப்பூர் மாநிலத்தில் இம்பாலா என்ற இடத்திலேயே தொடங்கப்பட்ட இந்த அமைப்புக்குப் பின்னால் ஒரு வரலாறு இருப்பதைப்போல ஜீவனுள்ள அமைப்பாகவும் இருப்பதால்தான் 5000 பேர் கொண்டு 500 ஆண்டுகளுக்கு மேல் நீடித்திருக்கிறது.

இந்த அமைப்பு 16 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் காலத்தில் மணிப்பூர் மாநிலத்தில் மெயிற்றி என்ற சமுதாயத்தில் காணப்பட்ட நடைமுறைக்கேற்ப குடும்பத்திலுள்ள ஆண்களை அறுவடைக்காகப் பல மைல் தூரத்துக்கப்பால் உள்ள பண்ணைகளுக்கும், அவ்வப்போது நடைபெறும் சண்டைகளுக்குப் போர் வீரர்களாகவும் அனுப்பிவிட்டு கிராமத்திலுள்ள பெண்கள் தமது வயல்களைத் தாமே விதைத்து அறுவடை செய்தும் அவற்றைக் கொண்டு சென்று சந்தைப்படுத்துவதை வழக்கமாகவும் கொண்டிருந்தனர். அத்துடன் வீடுகளில் உருவாக்கும் பொருட்களையும் சந்தைப்படுத்தித் தமது வருமானத்தைத் தேடினர்.

இப்படியாக ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் முயற்சி ஏற்படுத்திய விடயமே வளர்ந்து நாளடைவில் இமா ஹேயித்தால் என்று ஆகியிருக்கிறது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் பிரித்தானியர்கள் மணிப்பூர் மாநிலத்தில் காணப்பட்ட வர்த்தக நடைமுறைகள் அனைத்தையும் மாற்றிவிட்டு அங்கு விளைந்த அரிசி மற்றும் பிற தானியங்களை மணிப்பூர் மக்களின் தேவையை மனதில் கொள்ளாது.

மணிப்பூருக்கு அண்மித்த மாநிலங்களில் நிலைகொண்டிருந்த பிரித்தானியக் கூலிப்படைகளுக்கு உணவாக அனுப்பினர். இந்த நடவடிக்கையை ஆண்கள் அற்ற சமூகமாக இருந்தவர்கள் எதிர்க்கத் தொடங்கினர். 1939 அளவில் இது ஒரு பெரும் இயக்கமாக ஆரம்பித்து நுபி லான் அதாவது பெண்கள் போராட்டம் என்ற வடிவமெடுத்தது. இதன் ஞாகபார்த்தமாகச் சிலை ஒன்றும் அங்கு நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் போது பிரித்தானியர்களால் ஏற்படுத்தப்பட்ட வணிக நடைமுறைகளை மாற்றியமைக்கக் கோரி பிரித்தானியர்களுக்கு எதிராக பல வடிவங்களில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இத் தகைய மணிப்பூர் மக்களின் போராட்டத்தை நசுக்கவெனப் பல நடவடிக்கைகளை பிரித்தானியர்கள் மேற்கொண்டனர்.

இமா ஹேயித்தால் இடம் பெறும் அந்தக் கட்டடத்தை மணிப்பூரைச் சேராதோர்க்கு விற்கத் தீர்மானித்தனர். அந்தக் கட்டடத்தை ஒரு வியாபாரத்துக்கான சந்தை என்று கருதாமல் அதைத் தமது கலாசார அடையாளமாகப் பார்த்த மக்களுக்கு அதை விட்டுக் கொடுக்க முடியவில்லை. பின்பு இரண்டாவது உலக மஹா யுத்தத்தின்போது ஜப்பானியர்களினதும் அவர்களது கூட்டுப் படைகளினதும் முக்கிய கேந்திரமாக மணிப்பூர் விளங்கியதால் அந்தப் போரட்டத்தில் வீழ்ச்சி ஏற்ப்பட்டது.

பின்னர் யுத்தத்திற்குப் பிந்திய காலப்பகுதியில் மணிப்பூரின் கலாசாரா பண்பாட்டின் இயக்கமாக நுபி லோன் எனும் அந்தப் பெண்கள் போராட்ட இயக்கம் உருவெடுத்தது. அத்துடன் இமா ஹேயித்தால் என்ற பெண்கள் வியாபாரத் தலங்கள் எல்லாம் அவர்களது சமூக அரசியல் நடவடிக்கைகளை பரிமாற்றிக் கொள்ளக் கூடிய முறையில் மாற்றம் பெற்றது. அச்சு ஊடகம் இல்லாத அந்த நாட்களில் பிற மாநிலங்களிலிருந்து செய்திகளையும் பிற நிகழ்வுகள் பற்றிய தகவல்களையும் சேகரிப்பதற்காக மக்கள் இமா ஹேயித்தாலை நோக்கி வரத் தொடங்கினர். அன்று தொடக்கம் மணிப்பூர் மாநிலத்திலுள்ள இமா ஹேயித்தாலைச் சார்ந்த பெண்கள் இம்பாலின் உள்ளூர் பொருளாதாரத்தை பற்றிய நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் முக்கிய பங்கினையாற்றத் தொடங்கினர். இன்றுவரை அந்த நிலை நீடித்திருக்கிறது.

இன்றும் ஏகப்பட்ட சனக் கூட்டங்களால் நிரம்பி வழிகிறது இமா ஹேயித்தால் சந்தை. பலர் வாங்கவும் பலர் விற்கவும் என்று வந்து போகும் சந்தைபோலல்லாது ஒரு கலசாரத் தகவல் மையமாகவும் இமா ஹேயித்தால் விளங்குகிறது. 2016 ஜனவரி 4 இல் மணிப்பூரை ஆட்டிவைத்த பூமியதிர்ச்சியிலும் தன்னை இழக்காது இமா ஹேயித்தால் தக்க வைத்து இன்றும் தனது பணியைத் தொடர்கிறது.

இந்தச் சந்தையில் எல்லாவித பொருட்களும் விற்பனை செய்யப்படுகிறது. திருமணமான பெண்கள்தான் இங்கு வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இம்பாலாவுக்குத் தொலைவில் இருந்து வரும் பெண்கள் மாதம் ஒன்றிற்கு ரூபா 40 ஐச் செலுத்தி இதில் இடம் பெற்றுத் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர். இங்கு உள்ள அமைப்பில் பெண்கள் கடன் பெற்று வியாபாரம் செய்து கடனைத் திரும்பச் செலுத்த வாய்ப்புகளும் உண்டு. இங்குள்ள அனைவரும் சாரத்துடனும் சோல் எனும் மேலாடையுடனும் அழகாகக் காட்சி தருகின்றனர். மாலையானதும் கடைகளை மூடி வண்டிகளில் புறப்பட்டுச் செல்லுகின்றனர். சிலர் அதற்கிடையில் தமக்கு வேண்டிய இரவு உணவையும் சமைத்தெடுத்துச் செல்வதையும் காணலாம். பொதுவாக நல்லதொரு கூட்டு முயற்சி. பெண்கள் முன்னேற்றத்திற்கு ஒரு நல்ல உதாரணமாகும். இதுவும் பின்பற்றப்பட வேண்டியதொன்றே!

## குடிக்க....

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணெய்க் கசிவை நிறுத்துவதில் ஓரளவு முன்னேற்றம் தெரிகிறது என கூறியுள்ளது.

கடல்சார் நிபுணர்களின் கருத்துப்படி, கப்பலின் சரக்கு பெட்டகங்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். ஏனென்றால் அலைகள் ...ரும் காலங்கள் அவற்றை உடைத்துவிட ...ாய்ப்புகள் உள்ளன என்கிறார். அவ்வாறு ...டைந்தால் அது இதைவிட மிகப்பெரிய ...ிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவாக ...ருக்கும் என்கின்றனர்.

மேலும் பின்ட்டன் சுரங்க சொலமன் ...வுகள் லிமிற்றெட் (Bintan Mining Solomon Islands Limited) நிறுவனம் பாக்ஸைட் தாதுவை வெட்டியெடுப்பதை நிறுத்தவில்லை. அந்த நிறுவனத்தின் அதிகாரிகளின் கருத்துப்படி, தாதுவை வெட்டியெடுப்பதும் ஏற்றுவதும் தொடர்ந்து நிகழ்கிறது. இவையும் ஆபத்தை விளைவிக்கக் கூடியவைதான். ஆனால் சொலமன் தீவுகள் அரசு நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறுத்தச் சொல்லியுள்ளது.

இந்நிலையில் கப்பலின் உரிமையாளர் கடந்த புதன்கிழமை மன்னிப்பு கேட்டுள்ளார். மேலும் 5 மில்லியன் டொலர்களை எண்ணெய்க் கசவைச் சுத்தப்படுத்த அளிப்பதாகக் கூறியுள்ளார். சொலமன் தீவுகள் வரலாற்றில் இதுதான் மிகப்பெரிய பேரழிவு. எண்ணெய்க் கசிவைச் சுத்தப்படுத்த பல மாதங்கள் ஆகும். ஆனால் அந்த எண்ணெய்க் கசிவு கிழக்கு ரெனெல் தீவின் பவளப்பாறையை அடைய வெகுநாட்கள் இல்லை. எனவே அதனைத் தடுத்து நிறுத்தவும் கடற்கரையோர மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கவும் விரைந்து செயற்பட வேண்டும்.

எண்ணெய்க் கசிவு என்பது உலகம் முழுக்கவே தீர்க்க முடியாத பிரச்சினையாகவே உள்ளது. எண்ணெய்க் கசிவை அகற்றுவது என்பது எண்ணெய் எடுப்பதற்காக நிகழும் சண்டைகளைவிட பெரியது. ஆனால் அதனைப் பல அரசுகளும் பெரிதாக கண்டுகொள்வதில்லை. ஆனால் அமைதியாக உருவெடுத்து வரும் மாபெரும் சுற்றுச்சூழல் பேரழிவு.



வேலாயுதம் படம் மூலம் இணைந்த விஜயும் மோகன் ராஜவும் மீண்டும் இணையவுள்ளனர். இருவரும் இணையும் புதிய படம் குறித்து பேச்சு நடப்பதாக இயக்குநர் மோகன் ராஜா கூறியுள்ளார். வேலாயுதம் படம் பெரிய வெற்றி பெறாவிட்டாலும், மோகன் ராஜாவின் தனி ஒருவன், வேலைக்காரன் படங்கள் விஜயை கவர்ந்துள்ளன. இதனால் விரைவில் புதிய பட அறிவிப்பு வரலாம்.




விக்ரம் இப்போது ராஜேஷ் எம். செல்வா இயக்கத்தில் கடாரம் கொண்டான் படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தில் கமலின் மகள் அக்ஷரா ஹாசனும் நடிக்கிறார். படம் இறுதிக்கட்டத்தை நடந்து வருகிறது. இந்நிலையில் விக்ரம் படத்தில் ஒரு பாடலை பாடியுள்ளார் என அதன் இசையமைப்பாளர் ஜிப்ரான் கூறியுள்ளார்.



அஜித் தற்போது ஹிந்தியில் வெளியான பிங்க் படத்தின் மீளுருவாக்கத்தில் நடித்து வருகிறார். படத்திற்கு நேர்கொண்ட பார்வை எனப் பெயரிட்டுள்ளனர்.

எனினும் படத்தை அப்படியே எடுக்காமல் சிறு மாற்றங்களுடன் எடுக்கிறார் இயக்குநர் வினோத். படப்பிடிப்பு முடிவுக் கட்டத்தை நெருங்கினாலும் விஸ்வாசம் படம் தொடர்ந்து ஓடிக் கொண்டிருப்பதால் படம் வெளியாகும் திகதி பிற்போடப்பட்டுள்ளது.




தமிழ் சினிமாவில் ஒரு காலத்தில் முன்னணி நடிகையாக இருந்தவர் சோனியா அகர்வால். திருமணம் - விவகரத்து என வாழ்க்கையில் பல துன்பங்களை சந்தித்தவர் இப்போது மீண்டும் நடிக்க வந்துள்ளார்.

இப்போது, நாயகியை மையமாக வைத்து உருவாகும் தனிமை என்ற படத்தில் நடித்து வருகிறார். சிவராமன் இயக்கும் இந்தப் படத்தின் டீசர் அண்மையில் வெளியானது.

அஜித் நடிக்கும் நேர்கொண்ட பார்வை படத்தின் மூலப் படம் ஹிந்தியில் வெளியான பிங்க். இந்தப் படத்தில் நடித்தவர்களை கரண்ஜோஹர் நிகழ்ச்சி ஒன்றுக்காக தொடர்து நேர்காணல் செய்து வருகிறார்.

இதுவரை இந்நிகழ்ச்சியில் பங்கேற்க டாப்ஸிக்கு அழைப்பு விடுக்கவில்லை. இது தொடர்பில் டாப்ஸியை கேட்டவர்களுக்கு ‘ எனக்கு இன்னும் அந்தப் பேட்டியில் பங்கேற்க தகுதி வரவில்லை... தகுதிக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்”, என்று கோபமாகப் பதிலளித்திருக்கிறார் அவர்.





தமிழ் சினிமாவில் முன்னணிக்கு வந்து கொண்டிருப்பவர் நிவேதா பெத்துராஜ். ஹொலிவூட் அவெஞ்சர்ஸ் படவரிசையில் வரவுள்ள படத்திற்காக நடக்கவுள்ள நடிகையர் தேர்வில் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தப் படத்தில் தனக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று அவர் உறுதியாக நம்புகிறார். மேலும் அவர் இப்போது, விஜய் சேதுபதியின் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.




# தொடரும் முதலிடம்

2008 ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டிகள் ஆரம்பிக்கப்பட முன்னதாக உலகளவில் உதைபந்தாட்டத்திலும் கூடைப்பந்தாட்டத்திலுமே பெருந்தொகைப் பணம் பல கோடீஸ்வரர்களால் முதலீடு செய்யப்பட்டிருந்தன. ஆனால் ஐ.பி.எல்லின் வருகைக்குப் பின்னர் கிரிக்கெட்டும் அந்த விளையாட்டுக்களின் பட்டியலோடு சேர்ந்து கொண்டது.

கடந்த வருடம் போர்ப்ஸ் சஞ்சிகை வெளியிட்ட உலகின் பணக்கார விளையாட்டு அணியின் உரிமையாளர் பட்டியலில் இந்தியாவின் முதற் பணக்காரரும் மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளருமான முகேஸ் அம்பானி முதலிடம் பிடித்திருந்தார். அதற்கு முன்னதாக அமெரிக்க கூடைப்பந்தாட்ட அணியான லொஸ்ஏஞ்சல்ஸ் கிளிப்பர்ஸ் உரிமையாளரான ஸ்ரீவ் பால்மரே மூன்று வருடங்களாகத் தொடர்ந்து முன்னிலை வகித்து வந்திருந்தார்.

இந்நிலையில் போர்ப்ஸ் சஞ்சிகை, உலகளவில் 58 பணக்காரர்கள் 70 விளையாட்டுக் கழகங்களில் சுமார் 359 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளதாக கடந்தவாரம் செய்தி வெளியிட்டுள்ளது. அதன் பிரகாரம் கடந்த 12 மாதங்களில் முகேஷ் அம்பானியின் பண மதிப்பு 40.1 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 50 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்ததனால் உலகின் பணக்கார விளையாட்டு அணியின் உரிமையாளர் என்ற பெயரை மும்பை இந்தியன்ஸ் அணியின் ஊடாக அவர் இரண்டாவது வருடமாகத் தக்கவைத்துள்ளார்.

# முடிவுக்கு வருகிறதா?

கடந்த வருடம் ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் நடப்புச் சம்பியன் என்ற பட்டத்தோடு பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய ஜேர்மனி முதற்சுற்றுப் போட்டிகளுடன் வெளியேறி அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் இத்தோல்விக்குப் பின்னரும் பயிற்சியாளரான ஜோக்கிம் லோ பதவியில் இருந்து நீக்கப்படவில்லை.

இந்நிலையில் கடந்த வாரம் அவர் 'பெயோர்ண் முனிச் கழகத்துக்காக தற்போது விளையாடி வரும் ஜேர்மன் வீரர்களான 29 வயது தோமஸ் முல்லர் 30 வயதான மற்ஸ் ஹமெல்ஸ் மற்றும் ஜெரோம் பொடெங் ஆகியோர் ஜேர்மனி உதைபந்தாட்ட அணியின் நீண்டகால திட்டங்களில் ஒரு பகுதியாக இடம்பெற வாய்ப்பில்லை' எனக்கூறியிருந்தார். இது ஒருவகையில் மேற்கூறிய மூன்று வீரர்களினதும் தேசிய அணிக்கான இடத்தைக் கேள்விக்குள்ளாக்கும் செயலாகவே நோக்கப்படுகின்றது.

இதனால் அதிருப்தியடைந்த தோமஸ் முல்லர் இது குறித்த கருத்தை ஒரு வீடியோவாக தனது இன்ஸ்ரகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அதில் 'ஒரு பயிற்சியாளர்தான் விளையாட்டுத் தொடர்பான முடிவுகளை எடுக்க வேண்டும். அதில் எனக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. ஆனாலும் எங்கள் மூவராலும் இன்னமும் அதியுயர் திறமைகளை விளையாட்டில் வெளிப்படுத்த முடியும். அதனால் ஜோக்கிம் லோவின் இந்த முடிவின் தன்மையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை' எனக் கூறியுள்ளார்.



# வரவேற்பிற்குரிய விடயம்

10 நாடுகள் பங்குபற்றும் இவ்வாண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் ஒவ்வொரு அணியும் ஏனைய 9 அணிகளுடன் முதற்சுற்றுப் போட்டிகளில் விளையாடவுள்ளது. இதில் அதிக புள்ளிகளைப் பெறும் 4 அணிகள் அரையிறுதிச் சுற்றுப் போட்டிகளுக்கு நேரடியாகத் தகுதி பெறும். 1992 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளும் இவ்வாறே நடைபெற்றிருந்தன.

இந்நிலையில் இவ்வாறு போட்டி நடைபெறுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின்




முன்னாள் தலைவரான இன்சமாம் உல் ஹக் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார். 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் மொத்தம் 16 அணிகள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டே போட்டி நடத்தப்பட்டது. இதனால் மூன்று போட்டிகளிலும் வெல்லும் அணிகளுக்கே இலகுவில் அடுத்த சுற்றுக்குச் செல்லும் வாய்ப்பு இருந்தது. அந்த உலகக் கிண்ணத் தொடரில் இன்சமாம் தலைமையில் விளையாடிய பாகிஸ்தான் அணி அயர்லாந்து அணியிடம் தோற்றதனால் முதற்சுற்றுப் போட்டிகளுடனேயே வெளியேற வேண்டிய துரதிர்ஷ்டம் ஏற்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டே இன்சமாம் 'உலகக் கிண்ணத் தொடர்களில் ஐ.சி.சி. நடைமுறைப்படுத்திய எல்லாப் போட்டி அட்டவணை வடிவங்களும் வெற்றிகரமானதல்ல. 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்தில் அயர்லாந்திடம் நாம் அடைந்த தோல்வி எமக்கு மோசமான நாளாகும். ஆனால் 2019 உலகக் கிண்ணத்தில் ஒரே குழுவில் அனைத்து அணிகளும் இடம்பெற்றிருப்பதனால் ஆரம்பப் போட்டிகளில் தோல்வியடைந்தாலும் சுதாகரித்து எழுச்சியடைவதற்கான வாய்ப்பு இதில் உள்ளதாக' கருத்துக் கூறியுள்ளார்.

# நடையில் ஒரு சாதனை

கடந்த பல வருடங்களாகவே தடகளம் உட்பட அனைத்துப் போட்டிகளிலும் சீனாவின் ஆதிக்கம் அமெரிக்காவுக்கே சவால் விடும் வகையில் அமைந்து வருவது ஒன்றும் புதிதில்லை. அந்தவகையில் கடந்த வாரம் சீனாவின் ஹுவாங்சனில் நடைபெற்ற சீன வேக நடை கிராண்ட் பிறிக்ஸ் போட்டியில் உலக சாதனையொன்று முறியடிக்கப்பட்டதாக சர்வதேச தடகள சங்கங்களின் சம்மேளனம் அறிவித்துள்ளது.




பெண்களுக்கான 50 கிலோமீற்றர் தூரம் கொண்ட வேக நடைப் போட்டியிலேயே சீனாவின் லியு ஹொங் 3 : 59 : 15 நிமிடங்களில் போட்டித் தூரத்தை கடந்து உலக சாதனை படைத்துள்ளார். நான்கு மணி நேரத்தில் 50 கிலோமீற்றர் தூரத்தை கடந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். முன்னதாக 2018ஆம் ஆண்டு சீனாவின் இன்னொரு வீராங்கனையான லியாங் ருயி 4 மணி 05 நிமிடம் 36 செக்கன்களில் கடந்ததே சாதனையாக இருந்தது. லியு ஹொங் ஏற்கனவே 2016 ஆம் ஆண்டு பிறேசிலின் றியோடி ஜெனிரோவில் நடைபெற்ற 20 கிலோமீற்றர் வேகநடைப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றதோடு 2011 மற்றும் 2015 ஆம் ஆண்டு உலக சம்பியன்ஷிப் தொடர்களிலும் 20 கிலோமீற்றர் வேகநடைப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்தவர்.

தற்போது 31 வயதான லியு ஹொங் 2020 ரோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியிலும் வேகநடையில் தங்கப்பதக்கம் வென்று தனது சாதனையைத் தானே முறியடிப்பதற்கான கட்டியம்கூறலாகவே இந்த வெற்றி நோக்கப்படுகின்றது.

# நீடிக்க ஆதரவில்லை

ஏ.ரி.பி எனப்படும் தொழில்முறை ரென்னிஸ் சங்கத்தின் தற்போதைய தலைவராக விளங்குபவர் 54 வயதான பிரித்தானியாவைச் சேர்ந்த கிறிஸ் கேர்மோட். இவரது பதவிக்காலம் இந்த வருடத்தோடு முடிவதனால் புதிய தலைமை குறித்த கலந்துரையாடல் ஒன்று அமெரிக்காவில் தற்போது நடைபெற்றுவரும் இந்தியன்ஸ்வெல்ஸ் ரென்னிஸ் தொடரின்பொழுது கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஏ.ரி.பியின் வீரர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 2014 ஆம் ஆண்டு முதல் தலைவராகப் பதவி வகித்துவரும் கிறிஸ் கேர்மோட் பதவியில் தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என ரபெல் நடால் விரும்புகின்றார். ஆனால் ஜோகோவிச் அவருடைய காலத்தில் ரென்னிஸ் சிறப்பாக வளர்ச்சி பெற்றிருந்தாலும் மாற்றம் ஒன்று நிகழவேண்டும் என விரும்புகின்றார்.



எனினும் இந்தக் கலந்துரையாடலில் கிறிஸ் கேர்மோட்டுக்கான ஆதரவு தோல்வியைத் தழுவியதனால் இவரின் இடத்துக்கு அமெரிக்காவின் முன்னாள் வீரரும் ஏ.ரி.பி உறுப்பினருமான ஜஸ்ரின் ஜிமெல்ஸ்ரோப் அல்லது டபிள்யு.ரி.ஏயின் முன்னாள் நிறைவேற்று அதிகாரியான ஆன் வோர்செஸ்ரர் நியமிக்கப்படலாம் எனக் கருதப்படுகின்றது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 16.03.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.